Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 134

ஞாயிற்றுக்கிழமை 09 ஏப்ரல் 2023

பங்குனி 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஊழல் ஒழிப்புச் சட்டமே நாட்டுக்கு உடன் தேவை

## வலியுறுத்துகின்றது எதிர்க்கட்சி



**கொழும்பு, ஏப்ரல் 9**

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு முன்னதாக ஊழல் ஒழிப்புச் சட்டத்தையே அரசாங்கம் துரிதமாகக் கொண்டுவரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.** »14

# அரசியல்களத்தில் விரைவில் அதிரடி

## கூறுகின்றது பெரமுன

கொழும்பு, ஏப்.9

இலங்கையின் அரசியல் களத்தில் விரைவில் அதிரடிகள் காத்திருக்கின்றன. அவை என்ன வென்று இப்போது எம்மால் கூற »14

# பதின்ம வயதுச் சிறுமி ஓராண்டாக வன்புணர்வு

## காதலனும் நண்பர்களும் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயதுச் சிறுமியை ஓராண்டாக வன்புணர்ந்த சந்தேகத்தில் உயிர் »14

# ‘உயிர்த்த ஞாயிறு’ தாக்குதல் குற்றவாளிகளுக்குத் தண்டனை

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.9

இலங்கையில் 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலில் நேரடியாகவும் மறை »14

# புதிய சட்டத்தை எதிர்த்தால் பழைய சட்டம் நடைமுறை!

## மிரட்டுகின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஏப்.9

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டால் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் »15




“நாலு வருசமா எல்லாரும் இதைத்தான் சொல்லுகினம். ஆனால் ஒரு ஆணியைக்கூட பிடுங்கேலையே”

# வீதியில் காரை வழிமறித்து பனிப்புலத்தில் வாள்வெட்டு

## ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஏப்.9

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பனிப்புலத்தில் நேற்று நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் »14

# சிறுவர்களைக் கண்டுபிடிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மனித உரிமை ஆணைக்குழு பொலிஸாரிடம் கிடுக்கிப்பிடி

விரிவு:- பக்.15

# தீ அணைக்க கட்டணம் கோரியதா யாழ். மாநகர தீயணைப்புப் பிரிவு?

## விசாரணை நடத்தப்படும் என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப்.9

தனியார் விடுதியில் பரவிய தீயை அணைப்பதற்காக யாழ்ப்பாணம் மாநகரசபை தீயணைப்புப் பிரிவை அழைத்தபோது, கட்டணம் செலுத்தினாலே சேவை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது என பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுத்தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பாக விசாரணை »14

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ. 112,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A -" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து

# பெண்ணின் கழுத்தை நெரித்து அட்டூழியம் புரிந்த மதக்குழு!

## அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.9

வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து தாக்குதல் நடத்தியமை மற்றும் அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கிறிஸ்தவ மதச்சபை ஒன்றின் போதகர் மற்றும் இருவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட் »04

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை இயற்றுமிடமே பிரச்சினையாக உள்ளது

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சற்குணராஜா சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஏப். 9**

**இலங்கை அரசியலில் எந்தவொரு சர்வாதிகாரியும் நிரந்தரமாக இருந்தது கிடையாது. சட்டத்தை இயற்றுமிடம்தான் தற்போது இந்த நாட்டில் பிரச்சினையாகவுள்ளது - என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நேற்று நூலகமொன்றை அங்குரார்ப் பணம் செய்த பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று உலகமே ஒரு சிறைச்சாலையாகத்தான் காணப்படுகின்றது. இந்த உலகில் வாழ்கின்றபோது மனிதன் மிகவும் நேர்த்தியாக வாழவேண்டும். இந்தப் போதைப்பொருள்களின் உருவாக்கம் எவ்வாறு நிகழ்கின்றது. அதற்கு கல்விகற்றவர்களின் அறிவே பயன்படுகின்றது. போதைப் பொருள் நிலையங்களுக்கு அனுமதி வழங்குவது யார்? அனுமதியை வழங்கிவிட்டு எவ்வாறு குற்றச்செயலைத் தடுக்கமுடியும். இரண்டாவது உலகப்போரின்போது காயமடைந்த வீரர்கள் தமது காயத்தின் வலியை மறக்கக் கண்டுபிடிக்கப்பட்டதே ஐஸ் போதை. இன்று அது சமூகமெங்கும் விரவியிருக்கின்றது.

சிறைச்சாலையொன்றில் நூலகம் திறக்கப்படுவது சிறப்பானது. சிறைச்சாலையில் புனர்வாழ்வு வழங்கப்படுகின்றது என்கிறார்கள். இந்தப் புனர்வாழ்வு கட்டாயத்தின் அடிப்படையில் வழங்கப்படக்கூடாது. குற்றம் செய்தவர்கள் தாமாக மனம்திருந்தி இந்தப் புனர்வாழ்வை அடைந்துகொள்ள வேண்டும். கைதிகளாக வருபவர்கள் தமது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி சிறந்த மனிதர்களாக உருவாக்க இந்த நூலகத் திட்டம் உதவும். இலங்கையைப் பொறுத்தவரையில், குற்றம் இழைக்காவிட்டாலும் குற்ற மிழைக்க வைத்துவிடுவார்கள். இந்த நாட்டில் சட்டத்தை இயற்றுகின்ற இடம்தான் பிரச்சினை யாகவுள்ளது. நாடாளுமன்றத்தில் கட்சித்தாவல்கள்தான் இப்போது மிகையாகவுள்ளன. இதை நான் சொல்லவில்லை. அவர்களே சொல்லிக்கொள்கின்றார்கள் - என்றார். (ம-125)

# கல்வியறிவு உள்ளோரே கைதியாக வருகின்றனர்

## யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 9

சிறைச்சாலைக்கு கைதிகளாக வருகை தருவோரில் 75 சதவீதமானோர் கல்வியறிவைப் பெற்றவர்கள் என்று யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் உதயகுமார தெரிவித்தார்.

யாழ். சிறைச்சாலையில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற நூலக அங்குரார்ப்பண நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைக் கைதிகளை கைதிகள் என அழைக்கக் கூடாது. மாறாக சிறைச்சாலைக்குள் வருபவரை எங்களுள் ஒருவராகப் பார்க்க வேண்டும். சிறைச்சாலைக்கு வருபவரை எங்களுடைய கடமையின் நிமித்தம் நல்ல ஒரு மனிதராக மாற்றி சமூகத்துக்கு விடுவதே எமது நோக்கமாகும். புனர்வாழ்வுக்கு சிறைக்கைதிகளை உட்படுத்துவது 100 வீதம் வெற்றியளிக்கின்றதா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில் சிறைச்சாலையில் புனர்வாழ்வு பெற்றுச் சென்றவர்களில் பலர் மீண்டும் சிறைக்கு வருகின்றனர். அத்துடன் கல்வியறிவைப் பெற்ற 75 சதவீதமானவர்களே கைதிகளாக வருகின்றனர். எழுத, படிக்கத் தெரியாதவர்கள் கைதிகளாக வருவது குறைவே. அவர்களுக்கு நாம் வெவ்வேறு விதமான புனர்வாழ்வை வழங்கவேண்டும். பாதுகாப்புக் காரணங்களுக்காக கைதிகள் நினைத்த நேரத்துக்குச் சென்று புத்தகத்தை எடுத்து வாசிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. ஆனால் தற்பொழுது இரவு நேரத்தில் கூட சிறைக்கைதிகள் புத்தகங்களை எடுத்து வாசிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இங்கிருக்கக்கூடிய கைதிகள் அனைவரும் வாசிப்பார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஒரு கைதி வாசிக்கும் பொழுது ஒருவரைப் பார்த்து மற்றவர் பழகுவார் - என்றார். (ம-14,125)



# யாழ். சிறைச்சாலையில் நூலகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை காலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ், நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான 2 ஆயிரத்து 500 புத்தகங்களைக் கொண்ட நூலகம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவால் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது. (ம-14,125)

# தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஏப். 9

கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் தூக்கிலிருந்து பெண்ணொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,113)

வாடகைத்தாய் தேவை
தனது கருப்பையால் சுமந்து
பெற்றெடுத்துக்கொள்ள முடியாத தாய்க்கு
IVF மூலம் இந்தியாவிற்கு சென்று
இலங்கையில் குழந்தை பெற்றெடுப்பதற்கு
வாடகைத்தாய் தேவை.
(இரகசியம் பேணப்படும்)
(CS24207)(J-1)
077 699 9021

### வவுனியாவில் இன்று

# தமிழ்க்கட்சிகள் கலந்துரையாடல்

வவுனியா, ஏப். 9

சமகால அரசியல் நிலைப்பாடுகளை ஓரணியில் எதிர்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் முகமாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கான கலந்துரையாடல், வவுனியா வாடிவீட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் புதிய மாக்ஸிஸ லெனினிச கட்சி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தப்படும் அடக்குமுறைகள், காணி ஆக்கிரமிப்புக்கள், தமிழர் பாரம்பரியங்களை அழிக்கும் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயப்பரப்புக்களில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ம-14,110)

# போதையில் சாரத்தியம்; கண்டறிய பரிசோதனை

கொழும்பு, ஏப். 9

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனை நடவடிக்கைகளுக்காக குருதியில் மதுவைக் கண்டறியும் சுவாசப் பரிசோதனை அலகுகள் நாடுமுழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பரிசோதனை அலகுகள் விநியோகிக்கப்படவுள்ளன. அதில் 70 ஆயிரம் பரிசோதனை அலகுகள் வழங்கப்பட்டன. மீதமுள்ளவை அடுத்த இரு தினங்களுக்குள் அனுப்பப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மின்கட்டணம் உயர்ந்தாலும் மின்பாவனை குறையவில்லை



மின்சாரக் கட்டணங்களை அதிகரித்த போதிலும் மின்பாவனை குறையவில்லை என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கட்டண உயர்வால் மின்பாவனை குறைவடையும் என பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது. மின்சாரசபையின் கட்டுப்பாட்டு அலகின் தரவு விளக்கப்படத்துக்கமைய மார்ச் மாதத்துக்கான சராசரி மின்சார உற்பத்தி 44.22 ஜிகாவாட் மணிநேரம். மின்சாரக் கட்டண அதிகரிப்பால் எரிசக்தி தேவை குறையும் பட்சத்தில் சராசரி மின் உற்பத்தி 40.5 ஜிகாவாட் மணிநேரமாக குறையும் என எதிர்பார்த்தோம். ஆயினும் ஊகிப்புக்கு மாறாக மின்சாரப் பயன்பாடு மாறவில்லை - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆடுகளைக் கடத்துவதற்கு பொலிஸாருக்கு இலஞ்சம்!

## சாரதி கைதாகினார்

யாழ்ப்பாணம், ஏப். 9

சாவகச்சேரியில் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்து ஆடுகளைக் கடத்த முயன்ற நபர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிப் பகுதியில் இருந்து லொறியில் சட்டவிரோதமான முறையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளை நபரொருவர் கடத்திச் செல்ல முற்பட்டவேளை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிக்கு குறித்த நபர், 50 ஆயிரம் ரூபா லஞ்சம் கொடுத்துத் தப்பிக்க முற்பட்டார். எனினும் பொலிஸ் அதிகாரி இலஞ்சத்தை வாங்க மறுத்ததுடன் சந்தேக நபரைக் கைது செய்தார். அதன்பின்னர் கடத்திச்செல்ல முயன்ற நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளையும் பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபா லஞ்சப் பணத்தைப் பெறுவதற்கு மறுத்து, அவரைக் கைதுசெய்த பொலிஸ் அலுவலரின் நேர்மையைப் பாராட்டி அவருக்கு சன்மானம் வழங்க யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ம-14,20,26)

# கால்நடைகளைக் கடத்திய இருவருக்கு விளக்கமறியல்

கால்நடைகளைக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கால்நடைகளைக் கடத்திச்சென்ற வேளை சாவகச்சேரி கச்சாய் வீதியில் வைத்து இருவர் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். லொறியொன்றில் 11 மாடுகள் மற்றும் 12 ஆடுகள் கடத்திச்செல்லப்பட்ட வேளையே இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும், கா[illegible] ஒன்றில் [illegible] நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-14,159)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவதீட்சை வழங்கல்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் வடமாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய பிரதே சங்களில் சிவதீட்சை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, வடமாகாணத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சிவகுருநாதபீடத்திலும், கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத் திலும் மேற்படி சிவதீட்சை வழங்கப்படவுள்ளது.

தீட்சை அன்று உபதேச பயிற்சி வழங்கப்பட்டு உருத்திராட்சம் அணிவிக்கப்படும். அத்துடன் சங்கத்தால் நித்தியகரும விதி புத்தகமும் சிவதீட்சை சான்றிதழும் வழங்கப்படும். எனவே தீட்சை பெற விரும்பும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 0777197067, 0779773538, 0764096 121 ஆகிய அலைபேசி இலக்கங்களுடனும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் 0771768830, 0718380878 ஆகிய அலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ம-14)

# ஆண்டு நிறைவும் பரிசில் வழங்கலும்

இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய ஆண்டு நிறைவு நிகழ்வும் பரிசில் வழங்கலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பிரதி நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர், இணுவில் தென்மேற்கு கிராமஅலுவலர் இ.றமேஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# குருதிக்கொடை முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 9

அமரர் கெங்காதரன் நிஷாந்தனின் நினைவாக குருதிக் கொடை முகாமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுதர் சுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

# டெல்லியை சாய்த்த ராஜஸ்தான்

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது ராஜஸ்தான் ரோயல்ஸ்.

நேற்று பி.ப. 3.30 மணிக்கு ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடியது ராஜஸ்தான் ரோயல்ஸ். டெல்லியின் பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டது ராஜஸ்தான். அணியின் ஆரம்ப வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 60 ஓட்டங்களும், ஜோஸ் பட்லர் 79 ஓட்டங்களும் குவிக்க டெல்லிக்கு வெற்றி இலக்காக 199 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி வீரர்கள் சீரான இடைவெளியில் பவிலியன் திரும்பினர். பிருத்வி ஷா 14 ஓட்டங்களுடனும், லலித் யாதவ் 38 ஓட்டங்களுடனும், அக் ஷர் பட்டேல் 2 ஓட்டங்களுடனும், ரோவ்மன் பவல் 2 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, வோர்னர் தனித்து நின்று போராடி அரைச்சதம் கடந்தார். ஆனால் ராஜஸ்தானின் துல்லியமான பந்துவீச்சால் டெல்லியால் 142 ஓட்டங்களை மட்டுமே சேர்க்க முடிந்தது. 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைத் தனதாக்கியது ராஜஸ்தான் ரோயல்ஸ்.

# மும்பையை வீழ்த்திய சென்னை



நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் மும்பை இந்தியன்ஸ் அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நேற்று இரவு 7.30 மணிக்கு மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த 12ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸ் அணியும், சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

ஆரம்பம் முதலே சென்னை பந்துவீச்சாளர்கள் மிரட்டினர். மும்பை துடுப்பாட்டத்தில் தடுமாற 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களே சேர்ந்தன. அணியில் அதிகபட்சமாக இஷான் கிஷன் 32 ஓட்டங்கள் எடுத்தார். சென்னை பந்துவீச்சில் ஜடேஜா 3 விக்கெட்டுக்களையும், துஷார் தேஷ்பண்டே மற்றும் மிட்செல் சான்ட்னர் தலா 2 விக்கெட்டுக்களையும், சிசண்டா மாகலா ஓர் விக்கெட்டையும் எடுத்தனர்.

சென்னையின் ஆரம்ப வீரர்களாக டெலோன் கான்வே மற்றும் ருதுராஜ் கெய்க்வோட் ஆகியோர் களமிறங்கினர். கான்வே "டக் அவுட்" ஆக அடுத்து வந்த ரகானே அதிரடி காட்டினார். 27 பந்துகளில் 7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் என்று பந்துகளைப் பறக்கவிட்ட ரகானே 61 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதன்பின்னர் வந்த ஷவம் துபே (28 ஓட்டங்கள்), அம்பதி ராயுடு (20 ஓட்டங்கள்) களத்தில் நின்ற ருதுராஜ் (40 ஓட்டங்கள்) சென்னையின் வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியைத் தட்டிப் பறித்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.

## பெண்ணின்...

டுள்ளனர்.

பெரிய வெள்ளி தினமான நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் அச்சுவேலிப் பகுதியில் நடந்துள்ளது. அச்சுவேலிப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ மதச் சபை ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை பெரிய வெள்ளி ஆராதனை நடந்துள்ளது. அந்தப் பகுதி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையியில் அதிக ஒலி எழுப்பப்பட்டமை தொடர்பாக முன்னரும் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினமும் அதிக ஒலி எழுப்பப்பட்டுள்ளது என்று அயலவர்கள் கூறுகின்றனர்.

இதன்போது தமது சபைக்குச் சொந்தமான தேவாலயத்தின் மீது கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து, கையில் கொட்டன்களோடு குறித்த சபையின் போதகர், அவரது மகன் உள்ளிட்ட மூவர், அயலில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து வங்கி அலுவலரின் கழுத்தை நெரித்ததோடு அவரது தாயாரையும் தாக்கினர் என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்று போதகர் உட்பட மூவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, கல் எறியப்பட்டதாலேயே அந்த வீட்டுக்குச் சென்றோம் என்று போதகரும் மற்றைய இருவரும் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர். விசாரணைகளின் பின்னர் போதகரும் ஏனைய இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 10 . 06 . 1950

இறப்பு 10 . 03 . 2023

## அமரர் திருமதி நிர்மலாதேவி கனகரத்தினம்

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட அன்னையே
உன் நினைவுகளை சுமந்ததனால்
எம் நெஞ்சங்கள் கனத்துக்கிடக்கின்றன

எமது தாயாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் பங்கேற்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, மற்றும் சமூக வலைத்தளங்கள், கண்ணீர் அஞ்சலி, பதாகை மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உள்ளங் களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

53/3, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 744 8475

(CS24,372)(K-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 07 . 1946

மறைவு 06 . 04 . 2023

## சிவபுஸ்பம் சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி)

இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவபுஸ்பம் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி) கடந்த (06.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், தாவடி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசம்பு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் / பதில் அதிபர் - தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், சிவரூபன், சிவானி, சிவமயூரன், சிவரஞ்சன், சிவதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தவதனி, அன்பழகன் (விம்போ), மைதிலி, செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராசா, நாகராசா, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசரத்தினம், கமலாதேவி மற்றும் இராசலட்சுமி (லீலா), இரத்தினேஸ்வரி (ஈசு), கமலாம்பிகை, சுகிர்தாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சங்கரசிவம்பிள்ளை நாகேஸ்வரி, நாகேஸ்வரன் மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்புச் சகலியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சின்னத்தம்பி ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் கனகலிங்கம், கணேசலிங்கம், கமலாதேவி, யோகரத்தினம், நாகேஸ்வரி, ரத்தினேஸ்வரி ஆகியோரின் மச்சாளும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசரத்தினம், இராசமணி, இராஜேஸ்வரி (சின்னமணி) மற்றும் கனகமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், ஆதீசன், ஆரூஷன், அபிஷயன், அட்சயா, அரன், கவிஷன், ஜஸ்விகா, யுதாசினி, சுஜானா, சரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில்** பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs 49916) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை
ஏற்றம் A9 வீதிக்கு
அருகாமையில் 10 ஏக்கர்
தென்னங்காணி விற்பனைக்குண்டு.
0774384866

## குடமுழுக்கு உற்சவம்

யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு அருள் மிகு ஹரிகர புத்திர ஐயனார் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி முதல் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மகேஸ்வர பூஜை வழிபாடுக ளுடன் அன்னதானமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித் தனர். (ச-125)

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு-46

- ★ Diploma in English / Spoken English
- ★ Diploma in ICT
- ★ Diploma in Singalam
- ★ Diploma in Political Science
- ★ Diploma in Psychology & Counselling
- ★ Diploma in Care giver
- ★ Diploma in Nursing
- ★ Diploma in Fisheries Science
- ★ Diploma in Media

**ஆரம்பம் : 15.04.2023 10 AM**

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ் பிரிவுகள்

IELTS / Life Skills A1, B1, பிரிவு II
சண் மாஸ்டரின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன

English /ICT-O/L, A/L
வகுப்புக்கள்:(Eng/Tamil)
பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாக வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

IPS *to your future*
Thirunelvely
T.P: 021 4340229
076 685 2529

# First Year Rememberance



## Mr. Charles Joseph Rajaratnam

On 09.04.2023

Days will pass
And turn in to years
But we will always
Remember you with
Silent Years.

Remembered by
Gerturde Rajaratnam
Jegan, Prema, Prahas & Jenny

(CS/23310)(H-1)

# ரணில் ஜனாதிபதியாகாவிடின் பட்டினிச்சாவு மலிந்திருக்கும்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 9**

**ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யாமல் விட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பார்கள் - இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**


இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

ஜனாதிபதி பதவியிலிருந்து கோத்தா பய ராஜபக்ச விலகியவுடன் அன்று பிரதமர் பதவியிலிருந்த ரணில் விக்கி ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவா னார். அவர் இன்று துணிச்சலுடன் சவால்களை எதிர்கொண்டு வெற்றி நடை போடுகின்றார். அவரை அன்று நாம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யாமல் விட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்தி ருப்பார்கள்.



ரணிலின் ஆட்சியால் நாடு முன்னோக் கிய பாதையில் செல்கின்றது. குறுகிய காலத்தில் நாம் மீண்டெழுந்து வரு கின்றோம். சர்வதேசம் எமது நாட்டுக் குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. இலங்கை தொடர்ந்தும் சர்வதேசத்தை நம்பியிருக்கக் கூடாது. சர்வதேசத்திடம் வாங்கிய கடன்களை மீளச் செலுத்திவிட்டு சொந்தக் காலில் இலங்கை பயணிக்க வேண்டும் என்பதே ரணிலின் விருப்பம். அவருக்கு அனைவரும் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஏப். 9


சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட ஆனைக்கோட்டை, சாவற்கட்டு, உயரப்புலம் ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக அலுவலர்கள், பிரதேச சபையினர் எனப் பலரும் வீடுவீடாகச் சென்று மக்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதுடன், டெங்கு பெருக ஏதுவான இடங்களை அடையா ளம் கண்டு அவற்றை அழித்து வருகின் றனர். (ச-66)

# இனந்தெரியாதோரால் வாழைக்குலை திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 9

அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட 5 கப்பல் வாழைக்குலைகள் இனந்தெரியாதோரால் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள் ளன. கரணவாய் வடக்கு வன்னியநாச் சியார் கோயிலை அண்டிய வாழைத் தோட்டத்தில் இந்தத் திருட்டு இடம்பெற் றுள்ளது. (ம-14,9)



# திருக்கோணேஸ்வர ஆலய பிரமோற்சவம் ஆரம்பம்

*பாலாவித் தீர்த்தம் கையளிப்பு*

மன்னார், ஏப். 9

திருக்கோணேஸ்வரர் ஆலய மஹோற்சவ திருவிழாவுக்கென திருக்கேதீச்சர பாலாவி யிலிருந்து புனித தீர்த்தம் எடுத்துச் செல் லப்பட்டது.

திருக்கோணேஸ்வரப் பெருமானின் பிர மோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் 23 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் 24ஆம் திகதி தெற்ப உற்சவமும் இடம் பெறவுள்ளன.

இந்தநிலையில் மகோற்சவப் பெருவிழா வுக்கு திருக்கேதீச்சர பாலாவித் தீர்த்தம் ஆலய நிர்வாகத்தினரால் கடந்த புதன் கிழமை எடுத்துச் செல்லப்பட்டு கையளிக் கப்பட்டது. (ச-213)

## பொருளாதார மீட்பு நடவடிக்கை

# உலக வங்கியின் திட்டத்தில் கிளிநொச்சியும் உள்ளீர்ப்பு!

**கிளிநொச்சி, ஏப். 9**

**உலகவங்கி, இலங்கைக்குப் பங்களிப்பை வழங்கும் நோக்கில் மக்களின் தேவை களை உள்வாங்கி நான்கு வருட காலப்பகுதிக் கான திட்டமொன்றை தயாரித்து வருகின்றது. இந்தத் திட்டத்தில் கிளிநொச்சியும் உள்ளடக் கப்பட்டுள்ளது.**



இந்தத் திட்டத்தில் கிளிநொச்சி உள் ளடக்கப்பட்டதையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைகளை உள்ள டக்கி மாவட்டத்துக்கான திட்டத்தை தயாரிக்கும் நோக்கில், உலக வங் கியின் முன்னாயத்தக் கலந்துரை யாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் உலக வங்கி யின் இலங்கைக்கான பணிப்பாளர் இணையவழியூடாகப் பங்கேற்றார். இதன்போது கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், கிளி நொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் தேவைப்பாடு ஆகியவை தொடர்பில் சுட்டிக்காட்டி னார்.

பொருளாதாரத்தை மேம்படுத்தி - பசுமையான தாங்குதிறன் கொண்ட அபிவிருத்தியை நிலைநிறுத்தி பொரு ளாதார நலிவிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் உலகவங்கியால் முன்னெடுக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-214)

# மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் பிரதம விருந்தின ராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# அஞ்சலகங்களில் மாதக்கொடுப்பனவு

சாவகச்சேரி, ஏப்.9

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவுதொகை பெறுவோருக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. அதற்கென அந்தந்த பிரதேச அஞ்சல் அலுவலகங் களுக்கு கொடுப்பனவுகள் அனுப்பப்பட்டுள்ளன என பிரதேச சமூக சேவைகள் அலகு அறிவித்துள்ளது. இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (ச-9)



# இராணுவத்தினரால் வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கட்டு டைப் பகுதியில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடு அமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடை பெற்றது.

வன்னி [illegible] யோரின் [illegible] இந்த வீடு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. (ச-125)

# புதுவருடத்தை முன்னிட்டு வர்த்தகத் தொழிற்சந்தை!

யாழ்ப்பாணம், ஏப். 9

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண தொழிற் றுறை திணைக்களம் மற்றும் யாழ்.இந்தியத் துணைத்தூ தரகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வர்த்தகச் சந்தை இடம் பெறவுள்ளது.

இந்த வர்த்தகச் சந்தை நாளை 10ஆம், 11ஆம், 12ஆம் திக திகளில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய வளாகத்தில் மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை இடம்பெறவுள் ளது. இதில் நெசவு, கைப்பணி, உணவு, ஆடை, விவசாய உற்பத்திகள், தொழில் வழிகாட்டல், வியாபார ஆலோசனை, டிஜிற்றல் வங்கிச் சேவை மற்றும் ஏனையவை உள்ளடங்க லாக 100 கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த வர்த்தகச் சந்தை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது எனவும் இதற்கான அனுமதி இலவசம் எனவும் வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)



சண்டிலிப்பாய் கல்வளை காளியம்மாள் ஆலயத்தில், வசந்த மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-63)

# கசிப்புடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 9

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி பகுதியில் கசிப்புடன் பெண்ணொருவர் கடந்த புதன்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ள னர். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட நடவடிக்கையிலேயே அவர் கைதுசெய்யப்பட் டுள்ளார். (ம-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சிறுவர் காப்பகங்களும் சீர்கேடுகளும்

சிறுவர் காப்பகங்களின் சீர்கேடுகள் அண்மைக்காலமாக அடிக்கடி செய்திகளில் இடம்பிடிக்கத் தொடங்கியுள்ளன. நாளைய உலகை நிர்மாணிக்கப்போகும் சிறார்களில் சிலர் சூழ்நிலை காரணமாக ஆதரவற்றோராக மாறும் சந்தர்ப்பங்களில் அவர்களைக் காத்து, அரவணைத்து, ஆதரவு கொடுப்பதற்காகவே சிறுவர் காப்பகங்கள் உருவாக்கப்பட்டன. 'நானொரு ஆதரவற்ற குழந்தை' என்ற நினைப்பே வர முடியாதளவுக்கு சிறுவர் காப்பகங்கள் அங்குள்ள பிள்ளைகளைப் பராமரிக்கவேண்டும். பெரும்பாலான சிறுவர் காப்பகங்களுக்கு அரசாங்கத்தினதும், நல்லுள்ளம் கொண்ட தனியாரினதும் கருணையால் பொருளாதார ரீதியாகப் பெரும்பாலும் நெருக்கடி வந்ததில்லை. எனவே திட்டமிட்ட வகையில், காப்பகப் பிள்ளைகளுக்கு சுகாதாரமான, போஷாக்குமிக்க, சுவையான உணவையும், மகிழ்வான சூழலையும், எதிர்கால வாழ்வுக்கான கல்வியையும், தொழில் பயிற்சிகளையும் வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் கிடைத்தற்கரிய பணியைச் சிறுவர் காப்பகங்களால் செய்யமுடியும்.


சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கும் பிள்ளைகள் கல்வி கற்கவும், பொழுது போக்கவும், மனநிலையை மகிழ்வாக வைத்திருக்கவும், போதிய நேரம் உறங்கவும் வழிவகை செய்து கொடுக்கப்படவேண்டும் என்பது சிறுவர் காப்பகங்களுக்கான கட்டாய நிபந்தனைகளாக உள்ளன. ஆனால், சில சிறுவர் இல்லங்களிலே இதற்குமாறான சூழ்நிலையே காண்ப்படுகின்றது. கட்டாய மதமாற்றத்துக்காகவும், வேலைகளைச் செய்வித்துக் கொள்வதற்காகவும், பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், துன்புறுத்தி மகிழ்வதற்காகவுமே சிறுவர் காப்பகப் பிள்ளைகளைப் பயன்படுத்தும் பாதகங்களை அண்மைக்காலமாக அறிய முடிகின்றது.

ஒரு சிறுவர் காப்பகத்தில் இல்ல மேற்பார்வையாளர்கள் சொல்கின்ற பணியைச் செய்யமறுக்கும் பிள்ளைகளின் கண்களுக்கு மிளகாய்த்தூளைப் போட்டுக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். மதகுருவின் கடிநாயோடு விளையாடுமாறு கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள். உடலில் காயங்கள் வருமளவுக்கு அடித்தல், நுள்ளுதல் என்று சித்திரவதைக்குட்படுத்தியுள்ளார்கள். அதைவிட கேட்கச் சகிக்காத, மனரீதியாக ஆறாக்காயத்தை உண்டாக்கக்கூடிய வசைச் சொற்களை இந்தப் பிள்ளைகள் மீது மேற்பார்வையாளர்கள் முதல் சமையலாள் வரை தாராளமாகப் பொழிந்திருக்கிறார்கள். போதிய உணவைக் கொடுக்காமல் அரைப்பட்டினியும் போட்டிருக்கிறார்கள். இந்த விடயங்கள் எல்லாம் வெளியே அம்பலமானவுடன், தாங்கள் நல்லபடியாகப் பராமரித்தோம் என்று பொய்ச்சாட்சி சொல்லவும் பழக்கி இருக்கிறார்கள். இதுவா சிறுவர் காப்பகங்கள் செய்கின்ற வேலை? தங்களால் சிறுவர்களைச் சரிவரக் கவனிக்கமுடியாவிட்டால், அவர்களை இன்னொரு காப்பகத்துக்கு அனுப்பலாமே? அதைவிடுத்து, நிதியைப் பெற்றுக்கொள்ளவும், தங்கள் மதத்துக்கு ஆட்களைச் சேர்க்கவும் அவர்களுக்கு இந்தக் காப்பகங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. அதனாலேயே சிறுவர்களைச் சிறுவர்களாக நடத்தாமல், அவர்களுக்கு அன்பையும், ஆதரவையும் கொடுக்காமல் இப்படி இம்சித்திருக்கிறார்கள்.

பெரும்பாலான சிறுவர் இல்லங்கள் இப்படியான சீரிய வழியில் நடந்தாலும், ஒரு சில காப்பகங்களில் நடக்கும் சீர்கேடுகளும், அநியாயங்களும் ஒட்டுமொத்தச் சிறுவர் இல்லங்கள் மீதான சந்தேகப்பார்வையைச் சமூகமட்டத்தில் தோற்றுவித்துவிடக்கூடும். எனவே இனிமேல் சிறுவர் காப்பகங்கள் மீதான கண்காணிப்பை அதிகரித்து, அவர்களின் நலன் பேணுகையை உறுதிசெய்து, சிறுவர் காப்பகங்கள் உண்மையிலேயே சிறுவர்களின் வாழ்வைப் புடம் போடும் மையங்களாக மிளிர்வதை உரியவர்கள் உறுதிப்படுத்தும் பணியை இதயசுத்தியுடன் செய்யவேண்டும். செய்வார்களா?

## நாளொரு நல்வார்த்தை

சிறந்த யோசனைகள்
வேடிக்கைகளாகவே
சிந்தையில் வரும். முடிந்தவரை
வேடிக்கையாக சிந்தியுங்கள்
– டேவிட் ஒகில்வி




# 2024ஆம் ஆண்டுக்குள் ஜனாதிபதித் தேர்தல்!

## கட்சிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி இவ்வாறு சூசகம்



**கொழும்பு, ஏப். 9**
**2024ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்றும், அந்தத் தேர்தலில் தான் போட்டியிட வாய்ப்புள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சூசகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.**

சிறுபான்மைக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தவாரம் இடம்பெற்ற சந்திப்பின்போதே, 2024ஆம் ஆண்டு இறுதிப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்றும், தான் அந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடு சில மாதங்களுக்கு முன்னர் இருந்ததை விடவும் தற்போது நல்ல நிலையில் உள்ளது என்றும், பொருளாதாரம் வலுவான நிலையை அடைந்ததும் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்துத் தேர்தலுக்கு அழைப்பு விடுப்பேன் என்றும் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வற் வரிகள் நீக்கப்பட்டால் முட்டை விலை குறையும்!

கொழும்பு, ஏப். 9
கால்நடைத் தீவனத்துக்கு விதிக்கப்பட்ட வற் வரியை நீக்கினால் முட்டையின் விலையை 6 ரூபாவால் குறைக்க முடியும் என கோழிப்பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிடுகையில்,
முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை. வற் வரி நீக்கப்பட்டால் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கும். உள்ளூர்த் தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும்- என்றார். (ச-இ)

## புத்தாண்டின் பின்னர் புதிய அமைச்சரவை

கொழும்பு, ஏப். 9
புத்தாண்டின் பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
அமைச்சரவை மாற்றத்தில் பொதுஜன பெரமுனவின் பத்து உறுப்பினர்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மற்றும் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர் ஒருவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

**நாளை** 10.04.2023
திங்கட்கிழமை
பங்குனி 27

சுபநேரம் : 12.06 - 01.36
ராகுகாலம் : 07.36 - 09.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 200 மரக்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக மூன்று மரக் கன்றுகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பட்டபடிப்புக்கள் வளாகத்தில் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டன. (அ-ய-125)




வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழாவில் கனடாவைச் சேர்ந்த மிட் லன் மீடியா நிறுவன ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரனால் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் தமிழ்ச்சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், தமிழ்த்தாய்க்கும் தமிழை வளர்க்க அருந்தொண்டாற்றிய திருவள்ளுவர், ஔவையார் ஆகியோருக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் ஆண்டு நிறைவை யொட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழும் பரிசில்களும் வழங்கப் பட்டன. (அ-ய-113)



யாழ். கைதடி ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலயக் கட்டடப் பணிகளுக்கு ஒரு லட்சம் ரூபா நிதியை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை மேற்படி ஆலயப் பிரதம குருவிடம் நேரடியாகச் சென்று கையளித்தார். (ய-66)

சாவகச்சேரி நுணாவில் பாரதி பாலர் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி முன்பள்ளி மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-9)





தீவகம் கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறை கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி ஈட்டிய அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் மற்றும் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டியில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. (ய-9)



அராலி சரஸ்வதி முன்பள்ளியின் சிறுவர் சந்தை முன்பள்ளி வளாகத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ஒ-14)



யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டு விழா மேற்படி பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமே பயங்கரவாதத் தன்மைமிக்கது

### வாசுதேவ சுட்டிக்காட்டு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள், அரசை பயங்கரவாதிபோல் செயற்பட வைக்கக்கூடியவை. எனவே, இப்படியானதொரு சட்டத்தை நிறைவேற்றுவதுதான் பயங்கரவாதமாகும் இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர் அது சட்டரீதியில் சவாலுக்குட்படுத்தப்படும். நாமும் நீதிமன்றத்தை நாடுவோம். பயங்கரவாதத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமூலம்தான் பயங்கரவாதமாகும். இதன்மூலம் அரசு பயங்கரவாதிபோல் செயற்படலாம் - என்றார்.

(ம-44)



# கடை கட்டடம் வாடகைக்கு





நாவற்குழி சந்திக்கு அருகாமையில் புதிய கட்டடம் 36 அடி நீளமும் 36 அடி அகலமும் உடைய மூன்று திறந்த உள்ளக வடிவமைப்பினைக் கொண்டது.

இக்கட்டடம் மலசலகூட வசதிகள், CCTV Camera வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடியது. இக்கட்டடமானது A9 வீதியில் அமைந்துள்ளதோடு, புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

வியாபாரம் வர்த்தகம் மற்றும் வணிக செயற்பாடுகளுக்கு உகந்தது.

ஒப்பந்த அடிப்படையில் நிறுவனங்கள், தனியார் வங்கிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:

**076 717 0134, 075 717 0134**

(CR 39625)A-1


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 05 . 1942 | 08 . 04 . 2023 |

## கந்தையா செல்வராசா

திருநெல்வேலி தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா நேற்று (08.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தையல்முத்து தம்பதியரின் மகனும், இரத்தினம் சபாபதி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பங்கயவள்ளியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், யோகானந்தம், மணிமேகலை, பேரின்பநாயகம், பத்மாவதி, சற்குணவதி, தில்லைநாதன் மற்றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கண்மணி, கனகரத்தினம், நடராசர், விசுவலிங்கம் மற்றும் இந்திராதேவியின் மைத்துனரும், காலஞ்சென்ற மணிவண்ணன் மற்றும் தயாவதி, உதயகுமார், சுபாசினி, யாழினி, அஜந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்ததவம், குலதேவி, மகிபால், தர்மகுமார், சந்திரதாஸ், வாணி ஆகியோரின் மாமனாரும், அனோஜன், கோபிகா, நிலுக்ஷன், மாயா, தன்வர், அனித்கா, சந்தோஷி, ஆயுஷ், சபரிஷ், வினோத், ஆகாஷ், லக்ஸ்மன், கிஷா, யோவின், ரக்ஷ்வின் காலஞ்சென்ற கெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11/1, தாளையடி ஒழுங்கை,**
**திருநெல்வேலி தெற்கு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 006 2888**

(cs24360) (N-1)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 05 . 1936 | 05 . 04 . 2023 |

## சபாபதிப்பிள்ளை தெட்சணாமூர்த்தி

யாழ். வடலியடைப்பு பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தெட்சணாமூர்த்தி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலம்சென்ற சிவஞானம் அவர்களின் அன்புக்கணவரும் காலம்சென்ற சுப்பையா சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் சுதேஸ்வரன் (கனடா), திஸபாமா(யாழ்), மோகீஸ்வரன்(கனடா), சயந்திமாலா(கனடா), காலஞ்சென்ற மாலதி(யாழ்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் வனஜா, செல்வகுமார் (செல்வம்-அளவெட்டி) தர்ஷினி, நந்தகோபாலன், கபிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெதுசன் , பானுஜன் , தினேஸ்குமார் (தினேஸ்- பிரதேசசபை பூநகரி) , தர்மசீலன், மாதுஷா, அர்ச்சனா, ஜெயானன், யோநாதன், சஞ்சித், வஜிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2023) திங்கட் கிழமை காலை 7.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி/மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இத்தக்வலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி இல்லம்.**

**தினேஸ்-0772963354**
**மோகன்-0762561170**
**ஈசன்-0013026084423**
**மாலா-0014389230517**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 01 . 1947 | 06 . 04 . 2023 |

## சின்னப்பு இரத்தினம்

யாழ். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இரத்தினம் கடந்த (06.04.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு- சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதி- அன்னமுத்துவின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவஞானத்தின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி (கனடா), கமலாதேவி (கனடா), பத்மாவதி (கனடா), சண்முகலிங்கம் (நோர்வே), சற்குணசிங்கம் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றமணன் (கனடா), பிரசண்ணா (மனிதவள உத்தியோகத்தர்-CEB), றமணப்பிரியா (UK), இராகுலன் (கனடா), பிரசாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் -சுன்னாகம் பிரதேசசபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாநளினி (கனடா), பத்மாஜினி (ஆசிரியர்- யாழ் மத்திய கல்லூரி), குகப்பிரசாதன் (UK), ஸ்வேதா (கனடா), கமலரூபன் (Area Sale Executive Insee Cement) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவியாசன் (கனடா), காருண்யன் (கனடா), தணிகன், கனிதன், தரிணி, ஸ்வாதி (UK), சிவேஸ் (UK), தன்ஜா (UK), தன்விக்கா (கனடா), சனோசன் (கனடா), ஈகன் (கனடா), தஸ்வின், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 24379)(J-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம் முதியோர் இல்லம்

நல்லூர் கோவிலுக்கு அருகாமையில்

தாதியர், பராமரிப்பாளர், சேவையுடன் குளியலறை இணைந்த அறைகள் உண்டு. முதியோர் தங்கி நின்று ஆலய தரிசனம் செய்து செல்ல தங்குமிட வசதியும் உண்டு. (CS 49879)(3/6)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

திருவாசகம் முதியோர் இல்லம்,
இல. 89, செட்டித்தெரு, நல்லூர்
**076 207 4416, +44 7495890204**


## கண்ணீர் அஞ்சலி


பிறப்பு 02.06.1951 இறப்பு 07.04.2023

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி சிவனேஸ்வரி கருணாநிதி** அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி அன்னலட்சுமி தனிப்புலிசிங்க முதலியார்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.**
(CS/49901) AH-1


## Vacancy for Software Developer

A USA-based company with office Jaffna is looking for candidates for the posts of Web Application Developer to work at the Jaffna office.

**Qualifications:**

- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Mobile programming is a plus

The working hours would be from 9 am to 5:30 pm, weekdays only.

Send your CV to siva@monthlywarranty.com

(CS 24370) (N-1)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

09.04.2023



**அமரர் இந்திரவதி கனகசபாபதி**
(பங்குனி சங்கடஹர சதுர்த்தி – 11.04.2020)

கருசுமந்து கவனித்து காதலொடு வளர்த்தெடுத்து
உருவாக்கி எமையெல்லாம் உயர்த்திவைத்து மகிழ்ந்திருந்தாய்
பெருந்துன்பம் பலகடந்து பிள்ளைகட்காய் உனை உருக்கி
அருமருந்தாய் எங்களை நீ அணைத்தெடுத்துக் காத்து மூன்றாய்

கல்லுவைத்த கோவிலெல்லாம் எமைக் கரையேத்த கையெடுத்தாய்
கஸ்டம்பல வந்தபோதும் கண்ணியமாய் வாழவைத்தாய்
எல்லையில்லாத் துன்பத்தை ஏனம்மா தந்துவிட்டாய்
எமையிங்கு தவிக்கவிட்டு எங்கையம்மா சென்றுவிட்டாய்

நோய் என்ற பெயர்கொண்டு சாவுன்னை வென்றதம்மா
நொடியேனும் பிரியாத எம் தெய்வமெங்கு போனதம்மா?
வாய்விட்டுக் கதறுகிறோம் வந்துந்தன் முகம் காட்டு
வாடுமுந்தன் பிள்ளைகளின் வாசலுக்கு வந்துவிடு.

யாண்டுமிங்கு நாம் துதிப்போம் நினைவோடு பூச்சொரிந்து
ஜகம் பலவே கடந்தாலும் அழியாது உன் நினைவு.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவுகளுடன்....

**திருமதி கலைமகள் பஞ்சலிங்கம்.**
**லண்டன்.**

**குடும்பத்தினர்.**
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(CS/49891)AH-1

# பள்ளிவாசல் நிர்வாகத்தெரிவில் குழு மோதல்; ஒருவர் கொலை

*சம்மாந்துறையில் கொடூரம்*

மட்டக்களப்பு, ஏப். 9

சம்மாந்துறை பிரதேசத்தில் பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகத் தெரிவில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மலையடி கிராமத்தைச் சேர்ந்த 65 வயதான நபரே கொல்லப்பட்டவராவார்.

சம்மாந்துறை பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகக் காலம் முடிந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றிய ஒரு குழுவினர், பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தைத் தெரிவு செய்யவேண்டும் எனவும், மற்றைய குழுவினர் ஓரிரு தினங்களுக்குள் நிர்வாகத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதங்களின் பின்னர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நிர்வாகத்தைத் தெரிவு செய்வது என முடிவு செய்யப்பட்டுக் கூட்டம் கலைந்தது. கூட்டத்தில் பங்குபற்றிய இரண்டு குழுக்களும் வெளியே வரும்போதே மோதல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வரும் சம்மாந்துறைப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இதுவரை நால்வரைக் கைது செய்துள்ளனர். (ம-22)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

அன்னையின் மடியில்
16.10.1925

அரசடிக்காடுகதிர்காம சுவாமியின் காலடியில் சரண்
09.04.2012



திதி:
பங்குனிமாத அபரபக்கதிருதியை
(08.04.2023)

ஆண்டுகள் கரைந்தாலும்
- ஆறாத துயருடன் ஐயா!
சுவாசிக்கும் காற்றைப்போல்
வாசிக்கும் திருக்குறள் போல்
பூசிக்கும் இறைவன் போல்
நெஞ்சம் நிறைந்த உங்கள்
நினைவோடு வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**அன்பிற்குரிய குடும்பத்தினர்**
**'துவாரகா'**
**கதிர்காமசுவாமி கோவிலடி,**
**காரைநகர்.**

(CS 49900) (N-1)

# மரண அறிவித்தல்

மண்ணில் 11 • 04 • 1932



விண்ணில் 02 • 04 • 2023

## திருமதி பாக்கியலெட்சுமி கனகலிங்கம்

வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியலெட்சுமி கனகலிங்கம் கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், E.K & Co காலி முன்னாள் உரிமையாளரும் காலி சிவன் கோவில் முன்னாள் தலைவருமாகிய காலஞ்சென்ற கனகலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்ற சண்முகநாதன் (இலங்கை), காலஞ்சென்ற பரமலிங்கம் (கனடா), காந்திமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அரவிந்தன் (ஜேர்மனி), முரளீதரன் (இலங்கை), சரவணபவன் (இலங்கை), வனிதா (நோர்வே), சத்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ரதிதேவி (கனடா), ஜஸ்டீனா (இலங்கை), சிவகுமார் (நோர்வே), புராந்தகன் (பிரான்ஸ்)' ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆதித்தியா (கனடா), யூனிஸ் (இலங்கை), பியூலா (இலங்கை), ஜோன் (இலங்கை), லூக் (இலங்கை), யொஹானா (இலங்கை), யொனத்தன் (நோர்வே), சுவாதிகா (நோர்வே), பிரீதிகா (நோர்வே), நிவேதா (பிரான்ஸ்), கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் விசுவலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கோபாலபிள்ளை (இலங்கை), லீலாவதி (இலங்கை), புனிதவதி (கனடா), காலஞ்சென்ற தருமலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இமையவல்லி (கனடா), கலாவல்லி (கனடா) ஆகியோரின் அன்புச்சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.04.2023 செவ்வாய்க்கிழமை பிரான்சில் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு:** (CS/16730)AH-1 **தகவல் : குடும்பத்தினர்**

அரவிந்தன் - மகன் - 004915163530336,
வனிதா - மகள் - 004793464692,
ஜஸ்டீனா - மருமகள் - 0094773876360,
புராந்தகன் - மருமகன் 0033698465190
முரளீதரன் - மகன் - 0094773101405,
சத்தியா - மகள் - 0033651715990
சிவகுமார் - மருமகன் - 004794083335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

யாழ். வணிகர் கழகத்துக்கு அலுவலக உதவியாளர் (Peon) ஆண் வேலையாள் தேவை.

(CR/39620)AH-1

வணிகர் கழகம்,
இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
jaffnachamberofcommerce@gmail.com
**021 222 2367 / 076 575 4993**

## மணமகள் தேவை

1991. இந்து. ரேவதி. Doctor , புங்குடுதீவு, பதிவு #8928. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04.
www.EQMarriageService.com

**076 664 9401**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். பலாலி விமான நிலைய நுழைவாயிலிலிருந்து 150m தூரத்தில். கட்டுவன் - மயிலிட்டி CARPET வீதியில். புதிய மயிலிட்டி பிரதேச சபை செயலகத்துக்கு அண்மையில். 450 அடிக்கு மேற்பட்ட வீதி முகப்புடன். 100 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஹோட்டல்கள், விடுதிகள், வணிக தொழில் நிறுவனங்கள் அமைக்கவும். பண்ணை, விவசாயம் செய்யக் கூடிய செம்மண் நிலம் பிரித்தும் கொடுக்கப்படும். தரகர்கள் வேண்டாம். ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
**மாலை 3 - 7 மணிவரை**

(CS/23835)AH-1

**070 469 9402**

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் கட்டட வேலை செய்வதற்குப் பணியாளர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**078 561 2896, 077 849 6611**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

மூன்று வயதுடைய குழந்தையைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு.
**இடம் - தருமபுரம் (கிளிநொச்சி மாவட்டம்) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

(CS/24356)AH-1

**077 883 5825**

## காணி விற்பனைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக 22 அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும், 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடை கட்டுவதற்கான காணியும், யாழ். வைத்தியசாலை வீதியில் சத்திரச் சந்திக்கு அண்மையில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(CS/24374)(J-1) **077 899 5550**

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்தி. உரும்பிராய் வீதியில் 11 பரப்பு, 7 பரப்பு உரும்பிராய் பலாலி வீதி, 3 1/2 பரப்பு

**077 6011135**

## வாடகைக்கு

சுதுமலையில் இரண்டு பரப்புக் காணியில் இரண்டு அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு (Farm School க்கு அருகாமையில்)

**077 6011135**

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் கோயிலை அண்மித்த சுற்றாடலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

**077 133 1771**

## பெண் வேலையாள்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள அழகுசாதன பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.
ஆரம்ப சம்பளம் - 30,000/-

**077 067 4452**

## தையல் பணியாளர் தேவை

யாழ்நகரில் உள்ள பெண்களுக்கான
**தையல் கடைக்கு (கட்டிங் மற்றும் தையல் தெரிந்த பெண் ஊழியர்கள் தேவை)**

தொடர்புகளிற்கு:
**077 334 7766, 076 162 9517**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வேம்படி சந்தியில் இருந்து கண்டி வீதி சந்தி வரை மற்றும் ஸ்ரான்லி வீதி (குட் செட் வீதி) ராசாவின் தோட்ட சந்தி வரையான பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளிற்கு:
**077 621 1850, 077 210 1850**

## சென்.ஜோன்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01 இற்கான மாணவர் அனுமதி 2024

01) அ) விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 17.04.2023 முதல் 12.05.2023 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
இ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 31.05.2023 புதன்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

02) விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

03) தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ( Photocopy ) இணைக்கப்பட வேண்டும்.

04) சமாதான நீதவான் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (2 அங்குலம் x 2 அங்குலம்) புகைப்படம் ஒன்றும் விண்ணப்பப் படிவத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

05) ஒரு படிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா. 2000.00

06) **வயதெல்லைகள்:**
தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2018 இற்கும் 31.01.2019 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

07) தரம் 01 இற்குரிய நேர்முகப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.

**குறிப்பு:-** தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

**- அதிபர்கள் -**

(CS/24237)AH-1

## மணமகன் தேவை

1991, இந்து, உத்திராடம், Doctor, கரவெட்டி, பதிவு #8121. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04.
www.EQMarriageService.com

**076 664 9401**

## மணமகள் தேவை

1992, இந்து, பரணி, Doctor, காரைநகர், பதிவு #8860. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04.
www.EQMarriageService.com

**076 664 9401**

## மணமகன் தேவை

1995, இந்து, விசாகம், Doctor (Norway), புலோலி, பதிவு #8146. No Broker Commission, Register Fees Only. Essured Quality Lanka Pvt Ltd. Colombo 04.
www.EQMarriage Service.com

**076 664 9401**

## மணமகள் தேவை

1993 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) Doctor ஆகக் கடமையாற்றும் மணமகனுக்கு Doctor மணமகள் தேவை.

(CS/24355)AH-1

**077 633 4386**

## வீடு தேவை

புங்குடுதீவில் வீடு விலைக்குத் தேவை. (பழுதான வீடு என்றாலும் திருத்தி எடுக்கலாம்)

**077 729 5428**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுலம் (V), 1980, திருவாதிரை. பெல்ஜிய குடியுரிமை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். 1977 பரணி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (சைவ போசனம் மட்டும்) மணமகள் தேவை.

(CS/24361)AH-1

**Whatsapp - 070 611 2411**

## விற்பனைக்கு

பெரிய இன நாய்கள் வளர்க்கக் கூடிய கம்பியினால் செய்யப்பட்ட பெரிய நாய்க்கூடு விற்பனைக்கு உண்டு.

**077 623 8129**

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம்- ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மொத்த வியாபார நிலையத்திற்கு கீழ்வரும் பணி நிலைகளுக்குப் பணியாளர் தேவை.

1. **விற்பனையாளர்**
2. **முகாமையாளர்**
3. **கொள்வனவு உத்தியோகத்தர்** (கொழும்பில் பலசரக்குப் பொருட்களை கொள்வனவு செய்பவர்)

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.'

(CS/24368)AH-1

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
இல. 191, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**077 722 2536, 077 727 0536**

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதிசெய்த **புதிய நைட்டி துணிகள்** (2.90m) மலிவு விலையில் 925/- ரூபா விலையில் விற்பனையாகின்றன.
**33,35 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி.**

**077 415 1947**

## இலங்கையை மீட்பதற்கு இதுவே கடைசி வாய்ப்பு

கொழும்பு, ஏப். 9

இலங்கையை மீட்டெடுப்பதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் நாடு படுமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது அனைவருக்கும் தெரிந்த விடயம். கடந்த காலங்களில் நாங்கள் பதினாறு தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை அணுகியுள்ளோம். ஆனால் எதுவித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை. இப்போதுதான் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் 2022ஆம் ஆண்டு ஏற்பட்டதைவிட மோசமான பொருளாதாரச் சிக்கலுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் - என்றார். (ம-இ)

## மூன்று சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 9

வெவ்வேறு இடங்களிலிருந்து பெண்ணொருவர் உட்பட மூன்று பேரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இரத்தக் காயங்களுடன் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குளியாப்பிட்டி பிரதேசத்திலுள்ள குளமொன்றிலிருந்து வயோதிபப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேவேளை தனமல்வில பலஹருவ வாவியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ச-22)

## மரத்தூசு உண்டு

மரத்தூசு தேவையானோர் தொடர்பு கொள்ளவும். (இலவசமாக பெற்றுக் கொள்ளலாம், யாழ்ப்பாணம்)

(CS2589)(J-1) **077 917 7281**

## விற்பனைக்கு

மிருசுவில். யாழ் - கண்டி A9 வீதியில் மிகவும் பெறுமதியான 11.2 பரப்பு நிலம் Residential / Commercial / Industrial Purpose இற்கு உகந்தது. யாழ் நகருக்கு 30 நிமிடங்களில் செல்லும் தூரம்.

**075 800 0966**

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள் (Parts, ) மற்றும் Indian mixi (Grinder) மொத்தமாக விற்பனைக்குண்டு.

(CS/24359)AH-1 **077 656 6508**

## வீடு நாள் வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் 2 குளிரூட்டப்பட்ட அறைகள் சமையல் அறைகளுடன் தளபாட வசதிகளுடன் கூடிய வீடு நாள். கிழமை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **074 3743 767**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். கோப்பாய் பகுதியில் வீடொன்றில் தங்கி நின்று குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் அனுபவமுள்ள பணிப்பெண் ஒருவர் தேவை.( 45 வயதிற்குட்பட்டவர்)

தொடர்பு: **077 345 3868**


## மணமகள் தேவை(V)

1984, புனர்பூச நட்சத்திரம் லண்டன் PR உடைய மணமகனுக்கு(v) மணமகள் தேவை.

**077 255 0807**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## நாகராசா நிரஞ்சன்

ஆண்டு ஒன்று ஆனதையா!
ஆன போதிலும் மீளாது எமது துயர்!
ஆனையாக இருந்தீர் உறு துணையாக
அழாமலும் இருக்க முடியவில்லை
ஆழ்ந்து அனுபவத்தை மறக்கவும் முடியவில்லை
மீண்டும் வருவீர் என ஓடினோம் மீட்க
காணாமல் போனது ஏனோ களைத்து விட்டோம்
செல்ல மகள் ஏங்கி நிற்க! யாவரும் பார்த்திருக்க!
சகோதரி பரிதவிக்க! ஐயா எங்கு சென்றீர்?
மைத்துனி வாடியிருக்க ஏனோ மறைந்தீர்!
மைத்துனர் நிரஞ்சன் எங்கோ ஏனோ என!
சகலன் சாதுவாக ஏன் எதற்கு எனத் திரும்பிப் பார்க்க
உற்றார், உறவினர், நண்பர்கள் எதிர்பார்த்திருக்க
மருமக்கள், மக்கள் மலைத் திருக்க!
உரிமை கொண்டாடிய மனைவியோ
பாவியாகப் பார்த்துத் தனித்திருக்க!
வருவார் என ஏங்கி நிற்கும் போதே
காலன் கவர்ந்தான் என வாடவா?
தெய்வம் ஆனீர் என வணங்கவா?
தெய்வத்தின் பாதத்தில் சரணடைந்தீர் என எண்ணவா?
யார் அறிவார் எங்கு சென்றீர் என!

**தோற்றம்**
**29.03.1971**

**மறைவு**
**22.03.2022**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

(CS/49905)AH-1

அன்னாரின் முதலாம் ஆண்டு நிகழ்வு இன்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது விருட்சத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
நெட்டிலிப்பாய்.


உமது பிரிவால் துயருறும்...
மனைவி, பிள்ளை, உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**10.02.1938**

## பசுபதி செல்வரத்தினம்

**மறைவு**
**08.04.2023**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி செல்வரத்தினம் நேற்று (08.04.2023) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி - மீனாட்சி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தமுத்து - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் பாசமிகு கணவரும், கந்தசாமி (கொழும்பு), காலஞ்சென்ற சந்திரேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பகீரதன் (ரமேஷ் - லண்டன்), தர்மேந்திரா (நோர்வே), நவீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், லெக்சலா (லண்டன்), துளசி (நோர்வே), ஜீவா (மருத்துவர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவராசா, புஸ்பராசா, ந்தரலிங்கம் (ரவி - லண்டன்), சந்திராதேவி, மல்லிகாதேவி, றீஸ்கந்தராசா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜயச்சந்திரன் - கீதாரஞ்சனி (லண்டன்), ஜெனார்த்தனன் - ஜந்தினி (பிரான்ஸ்), கமல்ராஜ் - கோவர்த்தனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாய் மாமனும், குணாநிதியின் (ஆசிரியை) அன்புப் பெரியப்பாவும், தாரணா, ஆரியன், ஆரண்யா, பவின், ஜவின், லவண்யா, அபிநவ், ஜெனிஷன், வினூஷன், மகிஷா, ஆரன், ஆரவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (10.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.6, துல்மினிய ஒழுங்கை,**
**உடுவில் வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 282 5371**

(CS/24363)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY

NORTHERN UNI




# நாம் ஏன் யாழில்....

தற்பொழுது SLIIT இன் நான்கு வருட பட்டப்படிப்பினை யாழில் தொடரமுடியும்.
அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் வகுப்பறைகள்.

SLIIT மாலபே பீடாதிபதியின் நேரடித் தலைமையின்கீழ் அமைந்த தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழாம்

## School of Computing

**BSc (Hons) in Information Technology Specialising in:**
- Information Technology
- Data Science
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information System Engineering

## School of Business

**BBA (Hons) Specialising in:**
- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

பட்டப்படிப்பின் பின்னரான நிச்சயமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் பதிவு செய்யும் மாணவர்களுக்கு
**25% அடிப்படையிலான 6 லட்சம்**
வரையிலான பெறுமதி மிக்க புலமைப்பரிசில்கள்

க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களும் சித்தி இருந்தும் பட்டப்படிப்பினை தொடர முடியவில்லையா
உங்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய UGC அனுமதி பெற்ற பட்டப்படிப்பு எம்மிடம் இருந்து

NORTHERN UNI | 0771 471 471 | www.northernuni.lk | SLIIT UNI THE KNOWLEDGE UNIVERSITY

Contact Us - NorthernUNI Enrollment Office, 5th Floor, Magicktech Building 218, 5/1 Stanely Road, Jaffna, Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீ அணைக்க...

கள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டுக்குழிப் பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றுக் காலை 9 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அழைப்பு எடுக்கப்பட்டு உதவி கோரப்பட்டுள்ளது. அந்த விடுதியில் எவரும் இல்லாத நிலையில், அயலவர்களே தீயணைப்புப் பிரிவினருக்கு அழைப்பை எடுத்துள்ளனர்.

இதன்போது "தீயணைக்க வரவேண்டுமெனில் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், கட்டணத்துக்கு எவராவது பொறுப்பு நின்றால் மட்டுமே அந்தப் பகுதிக்கு வர முடியும்" என்றும் பதிலளிக்கப்பட்டதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இந்த இழுபறியின் பின்னர் விடுதி உரிமையாளரும், அயலவர்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்த நிலையில், தாமதமாகவே தீயணைப்புப் பிரிவினர் அங்கு வந்தனர்.

பின்னர் அங்கு தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், அதற்காக 10 ஆயிரம் ரூபா பணத்தை மாநகரசபைக்குச் செலுத்தவேண்டும் என்று விடுதி உரிமையாளரிடம் கோரினர் என்றும், விடுதி உரிமையாளர் உடனடியாக அங்கு வந்து பணத்தைச் செலுத்த முடியாதென மறுத்தாரெனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலனிடம் கேட்டபோது;

'தீயணைப்புக்காக யாழ்ப்பாணம் மாநகரசபையால் கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை. இது அத்தியாவசிய சேவை. அவ்வாறு கட்டணம் கோரப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக முறையான விசாரணை முன்னெடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்து நடந்த இடத்துக்கு யாழ்ப்பாணம் பொலிஸார் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். மின்னொழுக்குக் காரணமாகவே தீ விபத்து நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-125)

## 'உயிர்த்த...

முகமாகவும் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் பாரபட்சமற்ற விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் வலிமிகுந்த நினைவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள உயிர்த்த ஞாயிறு வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மனித வாழ்வுக்கு விடுதலை அளித்த இயேசு கிறிஸ்துவின் துன்பம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுகூர்ந்து இன்று உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று 3 கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்பட 8 இடங்களைக் குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இது நாட்டுக்கு ஒரு கரும் புள்ளியை உருவாக்கியது. ஈஸ்டர் ஆராதனைகளில் கலந்துகொண்ட கிறிஸ்தவ பக்தர்கள் உட்பட ஒரு குழுவினர் உயிரிழந்தனர் மற்றும் ஏராளமானோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் பாரபட்சமற்ற விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் ஈஸ்டர் தாக்குதலின் வலிமிகுந்த நினைவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்.

அதற்காக அன்றும், இன்றும், நாளையும் உறுதியாக, மாறாமல் முன்நிற்போம் என்பதை குறிப்பிட விரும்புவதுடன், அந்தத் தாக்குதலின் நோக்கம் எதுவாக இருந்தாலும், அது ஒரு கோழைத்தனமான, மனிதாபிமானமற்ற, இழிவான தாக்குதல் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

மத நம்பிக்கையுடனும், மனித நேயத்துடனும், மத நடவடிக்கைகளுக்காக தேவாலயங்களுக்கு வரும் அப்பாவி மக்களைக் குறிவைத்து நடத்தப்படும் கொடூரமான தாக்குதல்கள், குருட்டுப் பக்தி கொண்ட சில பைத்தியக்காரர்களின் மனிதாபிமானமற்ற நிலையை உணர்த்துகின்றது. ஆனால், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி பாவத்தால் அன்பு சிலுவையில் அறையப்பட்டாலும், நிச்சயமாக அன்பே உயர்வாகக் காணப்படும். உலக கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இனிய உயிர்த்த ஞாயிறு வாழ்த்துக்கள் - என்றார். (அ-எ-22)

## ஊழல்...

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் 'பன்டோரா' பத்திரங்கள் ஊடாக அம்பலப்படுத்தப்பட்ட ஊழல்வாதிகள் மற்றும் கடந்த காலங்களில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தமுடியும்.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஊழல் வாதிகளை உரிய முறையில் தண்டிக்கமுடியும். ஆனால், அரசாங்கம் தற்போது ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் சட்டத்தையே கொண்டுவர முனைகின்றது. அதன் ஊடாகத் தமக்குத் தேவையான ஊழல் வாதிக் கூட்டாளிகளை அரசாங்கம் பாதுகாக்கத் திட்டமிடுகின்றது - என்றார். (அ-எ-22)

## வீதியில்...

காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர், கார் ஒன்றை வழிமறித்து தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். பண்ணாகத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த இளவாலைப் பொலிஸார் 25 மற்றும் 30 வயதுடைய இருவரைக் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## பதின்ம...

கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான 4 இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இளைஞர்களில் ஒருவர் சிறுமியின் காதலன் என்றும் ஏனையவர்கள் அவரின் நண்பர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சிறுமி பாடசாலை செல்லும் மாணவி. அவரது தாயாருடன் வசித்து வருகின்றார். தாயார் காலையில் தொழிற்சாலைக்குச் சென்றால் இரவு வேளையே வீடு திரும்புவார். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி கடந்த ஓராண்டுக்கு மேலாக தான் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இளைஞர் ஒருவரைக் காதலித்ததாகவும் அவர் தன்னை வன்புணர்வுக்குட்படுத்தியதாகவும் அதன் பின்னர் அவரது நண்பர்களும் வன்புணர்வுக்குட்படுத்தியதாகவும் சிறுமி குறிப்பிட்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் அயலிலுள்ளவர்களுக்கு விடயம் தெரிய வந்ததைத் தொடர்ந்து அவர்கள் ஊடாகவே பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறுமியால் பெயர் குறிப்பிடப்பட்ட 4 சந்தேகநபர்களும் கைதாகினர். அவர்கள் 4 பேரும் 18 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அத்துடன் உயிர்கொல்லி போதைப்பாவனைக்கும் அவர்கள் அடிமையானவர்கள் என்று தெரியவந்துள்ளது.

சிறுமியின் காதலன் என்று குறிப்பிடப்படும் சந்தேகநபர் உயிர்கொல்லி போதைப் பொருள் பயன்படுத்தியமைக்காக கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சில மாதங்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுமியால் குற்றம் சுமத்தப்பட்ட 4பேரும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணையின்போது மறுத்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (அ-ஓ,5)

## அரசியல்களத்தில்...

முடியாது. அதிரடிகள் அரங்கேறும்போது அவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள் - இவ்வாறு ராஜபக்சக்களின் சகாவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்க்கட்சியில் இருந்து பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். அரசாங்கத்திலிருந்து ஒரு குழுவினர் எதிரணிப் பக்கம் செல்லவுள்ளனர் என்று மற்றொரு தரப்பினர் கூறுகின்றனர். எந்தத் தரப்பில் "பல்டி" நடக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

நாம் அமைச்சுப் பதவிகளுக்காக அலையவில்லை. தரமான அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனூடாக எமது சேவைகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பலமான ஆளும் கட்சி. அது பிளவடையக்கூடாது என்பதுதான் எமது விருப்பம் - என்றார். (அ-எ-22)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 . 02 . 1936 |  | 06 . 04 . 2023 |

**சிறில் ஜோசப் அல்பிறட்** (ஜெயசிங்கம், அத்தார்)

(இளைப்பாறிய புள்ளிவிபர ஆய்வாளர்)

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் வவுனியா, யாழ்ப்பாணம்- ஈச்சமோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சிறில் ஜோசப் அல்பிறட் கடந்த (06.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை சிறில் பெலிஸ்ரஸ் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மற்றில்டா பொன்தவம் (நோனா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி நீற்றா செல்வராணி அவர்களின் அன்புச் சகோதரனும், கிறிஸ்ரீன் ஆனந்தி (தாதி-குவைத்), ஐறின் சுகந்தினி (ஓய்வுநிலை தாதி- யாழ் போதனா வைத்தியசாலை), ஹெக்ரர் ரெட்ணானந்தன் (கனடா), அன்ரனிற்றா றதினி (தையல் போதனாசிரியர்-யாழ் பிரதேச செயலகம்), காமலின் ஷெரீனா (முன்னாள் தாதி யாழ் போதனா வைத்தியசாலை-ஜேர்மனி), பெலீசியன் ரெட்ணகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமால் (குவைத்), முருகமூர்த்தி (தாதி- யாழ் போதனா வைத்தியசாலை), நகுலேஸ்வரி (கனடா), ஜெயராஜ், அஜித் (ஜேர்மனி), சர்மிளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன் (ஆசிரியர்-British College, கிளிநொச்சி), பிரதீபன் (கனடா), ஆரணி (விரிவுரையாளர்-British College, யாழ்ப்பாணம்), ஆரபி, கீர்த்திகன் (கனடா), சங்கீதன் (கனடா), ஜோய் மிதுனன், ஜொய்லின் தர்மிக்கா, ஷெறோனா (ஜேர்மனி), அபிஷேக் (ஜேர்மனி), தூரிகன் (கனடா), கவிநிலா (கனடா), அருவிகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.04.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் (கொய்யாத் தோட்டம்) காலை 9.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

38/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(CS24385)(J-1)

தகவல்:
க.முருகமூர்த்தி.
077 644 5764


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✔ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✔ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✔ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✔ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✔ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✔ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✔ காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- ✔ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 24346) (J-1)


## சிறுவர்களை...

திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ள இரண்டு சிறுவர்களையும் கண்டுபிடிப்பதற்கு கோப்பாய் பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கடிதம் அனுப்பியுள்ளார்.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்லத்திலிருந்த இரண்டு சிறுவர்களை கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் காணவில்லை எனவும் இன்றுவரையில் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியவில்லை என்றும் 'உதயன் பத்திரிகையில்' நேற்றுச் செய்தி வெளியாகியிருந்தது.

பத்திரிகையில் வெளியான செய்தியின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயத்தை தனது சொந்தப்பிரேரணையாக எடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், காணாமற்போன சிறுவர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியாமைக்கான காரணத்தையும், அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் நாளை திங்கட்கிழமைக்குள் தெரியப்படுத்துமாறு பொலிஸாரிடம் கோரப்பட்டுள்ளது. (அ-ஓ.5)


**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.

**077 209 3846**

(cs 49898) (N-1)

**சமையலாளர் தேவை**

யாழ்நகரை அண்மித்த பகுதியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு றைஸ்வேலை, றொட்டி வேலை, இலங்கை சமையல் முழுமையாகத் தெரிந்தவர் தேவை. சம்பளம் வேலையைப் பார்த்து பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 652 0414**

(cs 49915) (N-1)


## புதிய...

சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் நிலைமையே ஏற்படும் என்று கூறியுள்ளார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்கள் காரணமாக அந்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தாமதிக்கப்படுகின்றது என்று கடந்தவாரம் நீதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இந்தச் சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளீர்களா? என்று கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பயங்கரவாதத் தடைச் சட்ட வரைவு தொடர்பில் குறைகள் கூறும் அனைவரும் அதன் ஒரு சில கூறுகளை மட்டுமே சுட்டிக்காட்டிப் பேசுகின்றனர். மாறாக அந்தச் சரத்துக்களின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்துகொண்டு அதில் என்ன குறைபாடு உள்ளது என்று யாரும் கூறவில்லை.

இந்தப் புதிய சட்ட வரைவை எதிர்ப்பவர்கள் நாடாளுமன்றத்தை நாடலாம். அதன்பின்னர் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ள நாம் தயாராக உள்ளோம். அரசமைப்புக்கு எதிராக எதுவும் செய்யமாட்டோம் - என்றார். (அ-எ-இ)


# ஆறாம் மாத நினைவஞ்சலி

**அமரர்**

## செல்லையா சண்முகம்

பிறப்பு 30.01.1944 — இறப்பு 12.10.2022



**திதி: அபரபட்ச திருதியை**

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஆறுமாதம் ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து
-நிற்கின்றோம்

எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மணற்காட்டு
முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**மணற்காடு,**
**காரைநகர்.**

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**
**077 354 8473**

(cs 49904 (N - 1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காணி விற்பனைக்கு

பனிக்கர் நீராவி புளியங்குளம் A9 வீதியில்
இரண்டு ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்குண்டு
(எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும்
களஞ்சியசாலை அமைப்பதற்கு தகுந்தது)
தொடர்புகளுக்கு: **077 735 4470**
(cs.49801) (N-1)

## தேர்

வட்டுக்கோட்டை கண்ணகியம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப் பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா ஆலய சித்தர் கேணியில் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(CS24384)(J-1) **070 701 3060**

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் உள்ள வீடொன்றில் பணிகளை மேற்கொள்ளப் பணிப்பெண் தேவை.
**077 069 8105**

## காணி விற்பனைக்குண்டு

தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: **076 0110 765**

## ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆர்வமுள்ள சகலருக்கும்
**From Grade 7 to Graduates**
தொழில்புரிபவர்களுக்குமானது.
K.Ganesh B.A **077 766 8725**

## அண்ணா விரைவு பொதிகள் சேவை



வெளிநாடுகளுக்கான பொதிகள் மற்றும் கடிதங்களை விரைவாகவும், குறைந்த செலவிலும் அனுப்ப தொடர்பு கொள்ளுங்கள்
யாழ்ப்பாணம் - நல்லூர் - சங்கானை - கைதடி
நெல்லியடி - கிளிநொச்சி - வவுனியா - கொழும்பு
**075 330 5509 - 070 330 5500 - 076 122 1566**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: **076 7390 413, 076 4365 814**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( **200.000/=** )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**
தொடர்பு:- **076 733 6047, 076 333 6079**
**076 733 6093**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.
தொடர்பு: **076 755 8606**
**077 6385 683**

WOMEN'S EDUCATION AND RESEARCH CENTRE

**CALL FOR APPLICATIONS**

### CERTIFICATE COURSE IN WOMEN'S STUDIES

- MEDIUM OF INSTRUCTION : TAMIL
- COURSE DURATION : 8 MONTHS
- ENTRY REQUIREMENTS : A DEGREE FROM A RECOGNIZED UNIVERSITY OR 3 PASSES IN GCE (A/L) WITH 3 YEARS' EXPERIENCE IN SOCIAL SCIENCE/ DEVELOPMENT FIELDS
- CLASSES WILL BE CONDUCTED ON SATURDAYS IN JAFFNA

To apply, send your CV and Cover Letter stating reasons for your interest in the course to womedre@gmail.com under the subject line 'Certificate Course in Women's Studies'

APPLICATIONS CAN BE SUBMITTED IN EITHER ENGLISH OR TAMIL

**CLOSING DATE FOR APPLICATIONS 17 TH APRIL 2023**

**Limited seats available (Affordable fees with scholaeships)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை (09.04.2023) சிகரம் : 143

அரசியலில் சகஜமென்பார் பாய்ச்சல்
இதுவுமொரு குணமடையாக் காய்ச்சல்
"நரமனிதர் நாடுகளில்
நம்மளையே விஞ்சுகிறார்"
குரங்கினங்கள் காடுகளில் கூச்சல்

\- வடிவழகையன்



# பேரவேரமா ஊர்கோலம்...!


## மக்கள் வரிப்பணத்தில் வடக்கு ஆளுநர் சுற்றுலா

○ தி.அமுதன்

வடக்கு மாகாண ஆளுநராக 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பொறுப்பேற்றுக்கொண்டவர் ஜீவன் தியாகராஜா. இலங்கையிலுள்ள 9 மாகாணங்களின் ஆளுநர்களைவிடவும் பல தரப்புகளினதும் கவனத்தைப் பெறுபவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக இருப்பவர்களே. இந்த இரு மாகாணங்களும் கொழும்பு அரசின் ஆட்சியுடன் வேறுபடுபவையாக இருக்கின்றன. இதன் காரணமாக இந்த மாகாணங்களுக்கு ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள், கொழும்பின் தேவையை நிறைவுசெய்கின்றவர்களாக இருக்கும்போது அந்த மாகாணத்தவர்களுடன் முரண்பட வேண்டி ஏற்படும். வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பதவிக்கு வந்த காலத்தில், ஜீவன் தியாகராஜா பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளாகியுள்ளார். அவர் மாகாணத்தின் அதிகார வரம்பை மீறிச் செயற்பட்டிருந்தார். வடக்கிலுள்ள அதிகாரிகளுடனான உறவுநிலையும் சிறப்பாக இல்லை. தான் என்ன சொன்னாலும் அதை அதிகாரிகள் ஏன், எதற்கு என்ற கேள்விகேட்காமல், மறுபேச்சின்றி செய்யவேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடு. இத்தகைய 'என்.ஜி.ஓ' மனோநிலைதான் இன்றுவரையிலும் அவர் மீதான சர்ச்சைகள் பெருகுவதற்கு முக்கியமான காரணம்.

இப்படிப்பட்ட வடக்கு மாகாண ஆளுநரான ஜீவன் தியாகராஜா, நாடே கஞ்சிக்கு கெஞ்சிக்கொண்டிருக்கையில், மக்களின் வரிப்பணத்தில் இந்தியாவுக்கு ஓராண்டுக்கு முன்னர் சொகுசுச் சுற்றுலா சென்றுவந்திருக்கிறார். இது தொடர்பான தகவலைக்கூட வெளியிடுவதற்கு தயக்கம் காண்பித்த அவரது செயலக அதிகாரிகள், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் கட்டளையால் வேறுவழியின்றி இப்போதுதான் வெளியிட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முதல் மே மாதம் 12ஆம் திகதி வரையிலான 15 நாள்கள் இந்தியாவுக்கான பயணத்தை வடக்கு மாகாண ஆளுநர் மேற்கொண்டிருந்தார். அவரது இந்தப் பயணம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு அதே ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி, மின்னஞ்சல் ஊடாக தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தத் தகவல் கோரிக்கை கிடைக்கப்பெற்றதை தபால்மூலம் பதிலளித்து உறுதிப்படுத்தியது ஆளுநர் செயலகம். 14 வேலை நாள்கள் கடந்தும் பதில் கிடைக்கப்பெறாததைத் தொடர்ந்து ஆளுநர் செயலகத்துக்கான மேன்முறையீடு அதே ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னரும் பதில் கிடைக்கப்பெறவில்லை என்பதால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு அமைவாக அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் இதுகுறித்து முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆளுநர் செயலகம் சார்பில் குறித்தளிக்கப்பட்ட அலுவலரான ஆளுநரின் செயலர் பொ.வாகீசன் ஆணைக்குழுவின் அமர்வுக்கு முன்னிலையாக வேண்டியபோதும் அவர் சமூகமளிக்கவில்லை. அதேவேளை ஆளுநர் செயலகத்தின் தகவல் அலுவலரை, தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை. ஆனால் அன்றைய ஆணைக்குழு அமர்வுக்கு முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால், தகவல் கோரிக்கையாளருக்குரிய பதில் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து அதன் பிரதி ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. ஆணைக்குழு இது தொடர்பில் தகவல் கோரிக்கையாளரிடமும் வினவியிருந்தது. ஆனால் அவ்வாறானதொரு பதில் கிடைக்கப்பெறவில்லை என்ற விடயம் ஆதாரங்களோடு ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆளுநரின் செயலகம் அனுப்பிவைத்துள்ள பதில் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்துமாறும் பணித்தது.



எனது இலக்கம்: G/NPC/2022/17

வடக்கு மாகாண ஆளுநரின் இந்தியப் பயணம் தொடர்பானது

1. வடக்கு மாகாண ஆளுநர் இந்த ஆண்டு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது இந்தியப் பயணம் உத்தியோகபூர்வமானதா?
ஆம், சனாதிபதி செயலகத்தில் முறையான அனுமதி பெறப்பட்ட உத்தியோகபூர்வமான பயணம்.
2. அவரது பயணத்திற்கான செலவு எவ்வளவு? (விமான சிட்டை, தங்குமிடம், இந்தியாவில் போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட விரிவான அறிக்கை)
நிதி அமைச்சின் M.F.01/2015/01 ஆம் இலக்க 2015.05.15 ஆம் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைய (சுற்றுநிருபத்தினை https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-circular/section/2015 எனும் இணைப்பிலிருந்து தரவிறக்கி கொள்ளலாம்) கொடுப்பனவுகள் யாவும் கொடுப்பனவு அதிகாரம் பெற்றவர்களினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. குறித்த சுற்றுநிருபத்திற்குட்பட்ட வகையில் அப்போதிருக்கும் கட்டண அடிப்படையில் விமான பயணசீட்டுக்கான கட்டணம் ஒருநாளுக்கான இடைநேர் செலவுகள் படி, நாளுக்கான இணைந்த படி என்பன மாத்திரம் பதினொரு கடமை நாட்களுக்கு அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இக்கொடுப்பனவுகள் 25.04.2022 ஆம் திகதியிலிருந்த US Dollar நாணய மாற்று விகிதத்தின்படி இலங்கை ரூபாயில் வழங்கப்பட்டிருந்தன.
3. உத்தியோகபூர்வ பயணத்திற்கான நோக்கம்? 5. உத்தியோகபூர்வ பயணத்தின் போது ஆளுநர் சந்தித்தவர்களின் விபரங்கள்?
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVII அ 154 ஆ பிரிவின்படி கௌரவ ஜனாதிபதியே கௌரவ ஆளுநரை நியமனம் செய்கின்றார். 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டம் பாகம் II இன் (அ) பிரிவின் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தல் வேண்டும். கௌரவ ஆளுநர் குறித்த விடயங்கள் தொடர்பான தகவல்களை ஜனாதிபதி செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியமையினால் அப்போது தகவல் கோரிக்கையாளருக்கு குறித்த தகவல்களை முழுமையாக வழங்க முடியவில்லை. குறித்த தகவல்களை ஜனாதிபதி செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. அவரது இந்தப் பயணத்தில் வேறு யாராவது இணைந்து கொண்டார்களா?
இல்லை

P.Vageeshan
Secretary to the Governor
Northern Province

ஆளுநர் செயலகம் முதலில் வழங்கிய பதில்

ஆளுநரின் செயலகத்திடம் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு வழங்கப்பட்ட பதிலானது, 'வட்டுக்கோட்டைக்கு வழி என்ன என்று கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு' என்பதைப் போல கேட்டது என்னவோ, சொன்னது வேறென்னவோ என்ற பாணியில் இருந்தது.

இதோ வாசகர்களுக்காக, ஆளுநர் செயலகத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவற்றுக்கான பதில்களும்

**கேள்வி: வடக்கு மாகாண ஆளுநர் இந்த ஆண்டு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது இந்தியப் பயணம் உத்தியோகபூர்வமானதா?**

**பதில்:** ஆம், சனாதிபதி செயலகத்தில் முறையான அனுமதி பெறப்பட்ட உத்தியோகபூர்வமான பயணம்

## 15 நாள்களுக்கு ரூ. 18 லட்சம் செலவு அம்பலப்படுத்திய ஆர்.ரி.ஐ. தகவல்

**கேள்வி: அவரது பயணத்துக்கான செலவு எவ்வளவு? (விமான சிட்டை, தங்குமிடம், இந்தியாவில் போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட விரிவான அறிக்கை)**

**பதில்:** நிதி அமைச்சின் M.F.01/2015/01 ஆம் இலக்க 2015.05.15 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைய (https://www.treasury.gov.lk/web/ministryoffinance circular/section/2015 எனும் இணைப்பிலிருந்து தரவிறக்கிக் கொள்ளலாம்) கொடுப்பனவுகள் யாவும் கொடுப்பனவு அதிகாரம் பெற்றவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கைக்கு உட்பட்ட வகையில் அப்போதிருக்கும் கட்டண அடிப்படையில் விமான பயணசீட்டுக்கான கட்டணம் ஒருநாளுக்கான இடைநேர் செலவுகள் படி ,நாளுக்கான இணைந்த படி என்பன மாத்திரம் பதினொரு கடமை நாள்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்தக்கொடுப்பனவுகள் 25.04.2022 ஆம் திகதியிலிருந்த அமெரிக்க டொலர் நாணய மாற்று விகிதத்தின்படி இலங்கை ரூபாவில் வழங்கப்பட்டிருந்தன.

**கேள்வி: உத்தியோகபூர்வ பயணத்திற்கான நோக்கம்? பயணத்தின் போது ஆளுநர் சந்தித்தவர்களின் விவரங்கள்?**

**பதில்:** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசமைப்பின் அத்தியாயம் XVII 154 ஆ பிரிவின்படி ஜனாதிபதியே ஆளுநரை நியமனம் செய்கின்றார். 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டம் பாகம் II இன் (அ) பிரிவின் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மத மளித்திருத்தல் வேண்டும். கௌரவ ஆளுநர் குறித்த விடயங்கள் தொடர்பான தகவல்களை

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சித்திரைப் புத்தாண்டில் புதிய அமைச்சரவை

## பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் போது, தமிழர் விவகாரத்தை முற்றாக ஓரம்கட்டும் உத்தி

அ.நிக்ஸன்

**2009** மே மாதத்துக்குப் பின்னரான சூழலில், ஈழத்தமிழர்களுக்கு ஒழுங்காகக் கட்டமைக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது தமிழ்த்தேசிய அரசியல் தலைமை. இல்லாமற் போனது போன்று, பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் பிளவுபட்டிருந்தன. ஆனால் தற்போது பௌத்த சமயத்தை மையமாகக் கொண்ட "இலங்கைத்தேசியம்"என்ற கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் ஒன்றிணையும் முயற்சிகள் சிங்களத்தரப்பு களிடையே மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2009 இறுதிப் போரின்போதும், இலங்கைத்தேசியம் என்பதைப் பாதுகாக்க கட்சி வேறுபாடுகள் இன்றி அவர்கள் ஒன்றிணைந்தனர். இப்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக, மீண்டும் ஒன்றிணைந்து செயலாற்ற முனைகின்றனர். இதன் பின்னணியில் மகாநாயக்க தேரர்கள் இயங்குகின்றனர் என்பதும் இரகசியமல்ல.

ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் 2009 க்குப் பின்னரான சூழலில் தத்தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வியூகங்களுடன், வெறுமனே வாக்கரசியல் கட்சிகளாக மாத்திரமே இயங்கி வருகின்றன. இதுதான் சிங்கள - தமிழ்க் கட்சிகளிடையேயான வேறுபாடு.

மலையகத் தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும், அவ்வப்போது ஆட்சியமைக்கும் சிங்கள அரசியல் கட்சிகளுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்பை ஏற்பது, அல்லது பேரம்பேசுவது போன்ற இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகின்றன என்பது வேறு அதேபோன்று வடக்கு-கிழக்கை மையமாகக் கொண்ட டக்ளஸ், கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் போன்றவர்களின் தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்கும் அரசியலும் வேறு. ஆனால் தமிழ்த்தேசியம் பற்றி உரத்துப் பேசுகின்ற பிரதான தமிழ்க் கட்சிகளின் அரசியல் இயங்குதளம், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு உரியதாக இல்லை என்பது இங்கே பட்டவர்த்தனமாகிறது.

இந்த நிலையில் 2020 ஏப்ரல் மாதம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிச் சூழலில் இருந்து தம்மை மீளக் கட்டியெழுப்ப முற்படும் சிங்கள அரசியல் கட்சிகள், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால்"இலங்கைத்தேசியம்" என்பதைக் கட்டியெழுப்ப வேண்டுமெனச் சிந்திக்கத் தூண்டப்பட்டுள்ளன.

அதாவது கட்சி முரண்பாடுகள் இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற தேச அரசியல் பற்றிய ஞானம் தற்போது பிறந்திருக்கிறது எனலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை மிகக் கடுமையாக விமர்சித்தாலும், இலங்கைத்தீவின் பொருளாதாரத்தை மாத்திரமல்ல, 2009 க்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர் விவகாரத்தையும் முற்றாக இல்லாமற் செய்வதற்குரிய உத்தியைக் கையாளும் ஆற்றல் கொண்டவர் ரணில் என்ற "பொது அபிப்பிராயம்" சிங்களக் கட்சிகளிடம் உண்டு.

இதற்கு ஒத்திசைவான முறையில்தான் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் சிந்திக்கத் தூண்டப்பட்டுள்ளனர். "கட்சி அரசியலாக நோக்காமல் இலங்கைத்தீவின் பொருளாதார மீள் எழுச்சியாகப் பார்க்க வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தற்போது மார்தட்டுகிறார்.

சஜித் திறமையானவர். ஆனால் தற்போதைய சூழலில் சஜித்தின் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பலர் ரணிலுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர்களாக மாறி வரும் நிலை இருப்பதாக ஹர்ஷ டி சில்வா தனக்கு நெருக்கான செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். சஜித்தை அவர் குறைகூறவில்லை.

"சஜித்தும் ரணிலுக்கு ஆதரவு வழங்கினால் நல்லது. இலங்கைத்தேசியம் பற்றி அக்கறையுள்ள சஜித் தற்போதைய சூழலில், முரண்பாடுகளைத் தவிர்ப்பார் என்று நம்புகிறேன்" என எரான் விக்கிரமரட்ணவும் தனக்கு நெருக்கமான செய்தியாளர்களிடம் மனம் திறந்து பேசியிருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தவேளை 2006 இல் மீண்டும் போர் ஆரம்பித்தபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் கரு ஜயசூரிய தலைமையில் பதினேழு பேர் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கி அமைச்சுப் பொறுப்புகளையும் ஏற்றிருந்தனர். விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்ற இலங்கைத்தேசிய நோக்கிலேயே மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கியதாக அப்போது கரு ஜயசூரிய விளக்கமளித்திருந்தார்.

2009 இல் போர் இல்லாமல் ஒழிக்கப்பட்ட பின்னர் கரு ஜயசூரிய மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்.

இதேபோன்றுதான் ஹர்ஷ டி சில்வா தலைமையில் ராஜித சேனாரட்ன உட்பட பதின்நான்கு பேர் அல்லது பதினொருபேர் தற்போது சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். அதாவது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக, தற்போதைக்கு ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்கித் தங்கள் பொருளாதார மூளையையும் பயன்படுத்தவேண்டுமென்று இவர்கள் ஆவல் கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது.

ஹர்ஷ டி சில்வா, ராஜித சேனாரட்ன, எரான் விக்கிரமரட்ன மற்றும் கபீர் காசிம் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரவி கருணாநாயக்கவை இந்த வெள்ளிக்கிழமை இரவு சந்தித்து தமது ஆதரவை உறுதி செய்துள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து குறைந்தது பதினொருபேர் அல்லது பதின்நான்கு பேர் அரசாங்கத்துடன் இணைவர் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இரண்டு பேருக்கு மாத்திரமே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமென ரணில் கூறியிருக்கிறார்.

இந்த நிபந்தனைகளினால் முக்கியமான உறுப்பினர்கள் இரண்டுபேர் இணைவதற்குச் சற்றுத் தாமதம் ஏற்படுமெனவும், ஆனாலும் முதற்கட்டமாக பதினொருபேர்இணைவது உறுதியெனவும் ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அதேநேரம் ஒரு வருடத்துக்கு முன்னரே 2024 ஜனவரியில் இடம்பெறலாமென நம்பப்படும் ஜனாதிபதித் தேர்தலை மனதில் கொண்டு ரணில் - சஜித் ஆகிய இரண்டு பிரதான தலைவர்களை ஒற்றுமைப்படுத்தும் வேலைத்திட்டத்தில் கடந்த வாரம் பௌத்த குருமாரும் பிரபல சிங்கள வர்த்தகர்கள் சிலரும் ஈடுபட்டதாகவும் ஆனாலும் சஜித் பிரேமதாஸ அதற்கு உடன்படவில்லை எனவும் தகவல்கள் கசிந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளின் பொது வேட்பாளராக ரணில் இருப்பார் என்றும், சஜித் பிரதமராகப் பதவி வகிப்பாரெனவும் எடுக்கப்பட்ட முடிவை சஜித் நிராகரித்துள்ளார். 2029 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை ரணில், சஜித்திற்கு வழங்குவார் என்ற உறுதிமொழியையும் சஜித்தின்குடும்ப உறுப்பினர்கள் ஏற்கவில்லை என்று தெரிகிறது. இதேவேளை, பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்க ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நாற்பது பேர் விரைவில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் லக்ஸ்மன் விஜேமான்ன கொழும்பில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் தற்போது ஐம்பத்து மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். சஜித்துடன் இணைந்து தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியடைந்த மலையகத் தமிழ் உறுப்பினர்களான மனோ கணேசன், வடிவேல் சுரேஸ், வேலுகுமார், இராதாகிருஸ்ணன் ஆகியோரும் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லிம் உறுப்பினர்கள் பலரும் ரணிலுக்கு ஆதரவு வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் ரணிலுக்கு , மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியில் 128 பேர் தொடர்ந்து ஆதரவு வழங்குகின்றமை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்புக்குப் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டு ஹர்ஷ டி சில்வா, ராஜித சேனாரட்ன ஆகியோர் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பர் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை பாட்டலி சம்பிக்க ரணவக்க புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகின்றார். சரத்பொன்சேகா உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலர் இந்தப் புதிய கட்சியில் இணைந்துகொள்வர் என்று சம்பிக்க ரணவக்க நம்பிக்கையாகக் கூறுகிறார்.

இந்தப் பின்னணியில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மேலும் பலவீனமடையலாம் அல்லது கட்சியே இல்லாமற் போகலாம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

மஹிந்தவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஆதரவு வழங்கவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்படுவார் எனவும் பிரதமர் வேட்பாளராக மஹிந்த போட்டியிடுவார் என்றும் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் இடம்பெற்ற இரகசியச் சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

ஆனால் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தனது புதிய கட்சியில் 2024 ஓகஸ்ட்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுப் பின்னர் ரணிலுடன் பேரம்பேசி பிரதமர் பதவியைப் பெறுவார் என்றும் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த இடத்தில் மஹிந்த ராஜபக்ச - சம்பிக்க ரணவக்க என்ற இரு அரசியல் தலைகளை ரணில் மிக நுட்பமாகக் கையாளுவதாகவும், இரண்டாம் நிலைத் தலைவராக இதுவரை அறியப்பட்ட சஜித் வெள்ளிக்கிழமை இரவில் இருந்து தனது அரசியல் முக்கியத்துவத்தையும் தலைமைத்துவத்தையும் இழந்துவிட்டார் எனவும் கொர்ழும்பில் உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தமக்குள் பேசிக்கொள்கின்றன.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகளின் முழு ஒத்துழைப்புடன் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள எழும்போது ஈழத்தமிழர் விவகாரம் மாத்திரமல்ல, முஸ்லிம், மலையகத் தமிழர்கள் ஆகியோருடைய அரசியல் சிக்கல்களும் இருக்கவேகூடாது என்ற கோணத்திலேயே ரணில் விக்கிரமசிங்கவை மையப்படுத்தி மூத்த சிங்கள அரசியல் பிரதிநிதிகளின் மூளை இயங்குவது பகிரங்கமாகியுள்ளது. ஜே.வி.வி. ரணிலை விமர்சித்தாலும் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கும் அளவுக்குத் தமது அரசியலைத் திட்டமிட்டு வகுத்துள்ளது. அதாவது சிங்கள இனவாதத்தை வேறொரு முறையில் ஜே.வி.பி. தனது அடிப்படை மூலதனமாக்கியுள்ளது.

மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி எதிர்காலத்தில் ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்துப் பலமான எதிர்க்கட்சியாக மாறலாம். அல்லது மஹிந்தவுடன் மீண்டும் இணைந்து தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக்கட்டியெழுப்பிப் பலப்படுத்த முற்படலாம். இது பற்றிய உரையாடல் ஒன்றைச் சந்திரிகா ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆகவே சிங்களக் கட்சிகளின் "இலங்கைத்தேசியம்" என்ற கொள்கைப் பற்றும், கட்சி முரண்பாடுகளுக்கு அப்பால் யாரைப் பயன்படுத்தியேனும் முதலில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமென்ற ஒருமித்த கருத்துடைய செயற்பாடுகளுக்கு ரணிலைப் பயன்படுத்தும் நுட்பமும் பௌத்த தேசியத்தின் அடிப்படை என்பது புரிகிறது.

இந்த அடிப்படையின் பிரகாரமே, 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில், ஈழத்தமிழர் பற்றிய ஜெனிவா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் அவ்வப்போது நிராகரித்த முறைகளைச் சுட்டிக்காட்ட முடியும்.ஆனால் 2009 க்குப் பின்னரான சூழலில் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை நிறுவ, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருமித்த குரலில் செயற்பட்டிருக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள், தற்போது சிதறிக் கிடக்கின்றன.

2015 ஐப் போன்று சர்வதேசப் பொறிமுறைகளுக்கு ஏற்ப பிரதான சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவு கொடுக்கும் அரசியல் சூழல்கூட உருவாக முடியாத அளவுக்குச் சிங்கள - பௌத்த தேசியம் தற்போது தனித்துவமாகப் பலமடைந்து வருகின்றது. குறிப்பாக ரணில் தனது நிலையை ஸ்திரப்படுத்தி வருகிறார். ஆகவே பொருளாதார நெருக்கடிச் சூழலில் இருந்து சிங்களக் கட்சிகள் பாடம் கற்றதுபோன்று தமிழ்த்தேசியக் கட்சிகள் பாடம் கற்கத் தவறிவிட்டன என்பதே யதார்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?



வெடுக்குநாறிமலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம், கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம், புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது... போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?

முதலாவதாக, ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவாக் கூட்டத் தொடர் முடிவுக்கு வந்தது. இரண்டாவதாக, இரண்டு முக்கியமான அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போய் வந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களைக் கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம். அதன்பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது, ஐ.எம்.எஃப்.பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால் இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போடவேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால், அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐ.எம்.எஃபின் நிபந்தனைகளுக்கு பணிந்து மானியங்களை வெட்டும்போது அல்லது பொது நிறுவனங்களைத் தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்களப் பொதுமக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம், உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற முன்நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது. மூன்றாவது காரணம், தன்னை விட்டால் வேறு தெரிவு உலக சமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் அண்மைய வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐ.எம்.எஃபின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும்போது ஏழைகள் கொதித்து எழுவார்கள். பொதுச்சேவை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் போது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் கொதித்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இனவிவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன் மூலம் சாதாரண சிங்களமக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல. ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான். தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது. தமிழ்மக்கள் பௌத்தமயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராகப் போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டுவிடும்.

இது ஒரு காரணம். அடுத்த காரணம், அரசாங்கத்தைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.

அவ்வாறு முன்வைத்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்கள - பௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் வெளித்தரப்புக்கள் குறிப்பாக மேற்குநாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒரே விதமாகச் சிந்திக்கின்றன. இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜே.வி.பி. படிப்படியாக வளர்ந்து வருவதாகக் கருதப்படுகிறது. இடது பண்புடைய ஒரு கட்சி குறைந்தபட்சம் பலமான எதிர்க்கட்சியாக மேலெழுவதைக்கூட, மேற்படி நாடுகள் விரும்பாது. எனவே ஜே.வி.பி.யின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும். அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

> எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான் தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது.

அதாவது ஜே.வி.பி.தான் இப்பொழுது ரணிலுடைய பலம். எப்படியென்றால் ஜே.வி.பி. மற்றும் ஜே.வி.பி.யிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிசக் கட்சி போன்றன முன்னெடுத்த "அரகலய" போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது. இப்பொழுது ஜே.வி.பி. பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நிதிமுகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜே.வி.பி. அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும்வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் அதனதன் பயம். இதில் தமிழ்மக்களின் பயத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? நாட்டின் பொருளாதார நெருக்கடியை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தவேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக்கூடும். ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனைத் தமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாகக் கருதிக் கையாள்வதாகத் தெரிகிறது. இலங்கை நொடிந்து போயிருக்கும் காலகட்டத்தில் உதவிகளின்மூலம் இலங்கையை எப்படித் தம்வசப்படுத்தலாம் என்றுதான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐ.எம்.எஃப்.பின் கடன்பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன. இப்படியாக பேரரசுகள் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாகப் பயன்படுத்தத் தொடங்கினால், உதவிகளையும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும், ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர். ஐ.எம்.எஃப். போன்ற நி[illegible] கையாண்டவர். [illegible]யமான ஒருவரோடு விவகாரங்களைக் கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃப்.பும் கருதக்கூடும். அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக்கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும்வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான். இப்படிப்பார்த்தால், உள்நாட்டில் ராஜபக்சக்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான். வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐ.எம்.எஃப்.புக்கும், உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் [illegible]த்துவிட்டது.

[illegible]. நிறைவேற்று அதிகாரம், மேற்கத்திய ஆதரவு, ராஜபக்சக்களின் தங்கு நிலை, ஆழங்காண முடியாத தந்திரம், வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்கவேண்டும் என்ற ஆவேசம்... போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள் ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச் சிதைந்து போய்விட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால்தான் தன்னையும் நிமிர்த்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம், சஜித்தையும் உடைக்கலாம் என்றும் அவருக்குத் தெரியும்.

பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகவேண்டும். மேற்கின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும். அந்த எதிர்ப்பைத் திசைதிருப்ப அவருக்கு இனவாதம் தேவை. அதைத்தான் அவர் செய்கிறார். அதுவும் ஜெனிவாக் கூட்டத்தொடர் காலகட்டத்திலேயே செய்கிறார்.

ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. வெடுக்குநாறிமலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்மக்கள் பலமான ஒரு திரட்சியைக் காட்டமுடியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலைக் கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஓர் ஆணைக்குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களைக் கோபப்படுத்துகின்றது.

ஒருபுறம் ஐ.எம். எஃப்.பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது. இன்னொருபுறம் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழும் சிங்கள மக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பிவிடுகிறது.

ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது. அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவது. ஆக மொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து அதற்காக உழைக்கத் தொடங்கிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 ஏப்ரல் 2023



're visiting Jaffna' என்ற தலைப்பில் பிரபல பத்திரிகையாளர் நாராயணசாமி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

# யாழ்ப்பாணம் இப்போது..!

தமிழில் ந.பரமேஸ்வரன்

கொரோனாப் பேரிடர் போன்ற பிரச்சினைகளுக்குப்பிறகு யாழ்ப்பாணம் போவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த விஜயத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள சாதக, பாதக அம்சங்களையும் காணக்கூடியதாக இருந்தது. பெப்ரவரி 11 ஆம் திகதி ஜனாதிபதி இந்திய கலாசார மத்திய நிலையத்தை திறந்து வைத்த போது இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச்சன்னங்களின் அடையாளங்களுடன் இருந்த வீடுகள் ஒன்றையும் இப்போது காணவில்லை. இவை யாவும் வெளிநாட்டுப்பணத்தின் மூலம் புதுமெருகூட்டப்பட்டுள்ளன.

இந்திய மத்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பிரதான வீதிகள் பல காப்பெற் வீதிகளாக மாறியுள்ளன . எனினும் வேலணை- புங்குடுதீவு - நயினாதீவு வீதி புனரமைக்கப்படவில்லை. அரசாங்கம் இந்த விடயத்தில் உடன் கவனம் செலுத்தவேண்டும். மக்கள் மத்தியில் பணப்புழக்கம் இருப்பது தெரிகிறது. இடிந்த கட்டடங்களும், வீடுகளும், கோயில்களும் புனரமைக்கப்பட்டுள்ளன. பல்பொருள் அங்காடிகளும் திருமண மண்டபங்களும் முறையான பொருளாதாரத் திட்டமிடலின்மையால் விரைவில் வெள்ளை யானையாக மாறக்கூடும்.

திருநெல்வேலிச் சந்தை, யாழ்ப்பாணம் சந்தை என்பன புனரமைக்கப்படவில்லை. ஆரியகுளம் வரலாற்றுத்தலமாகவும், உல்லாசப்பயணத்தலமாகவும் மாறியிருக்கிறது. நகரத்தின் பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த மிதிவண்டி இப்போது வெளிநாட்டுப்பணம் காரணமாக ஸ்கூட்டராக மாறி விட்டது. இது இளசுகளின் அந்தஸ்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதுடன் வயதானவர்கள் பொதுப் போக்குவரத்தை நம்பியிருக்கவேண்டிய தேவையையும் இல்லாமற் செய்துள்ளது. கடந்த சில வருடங்களாக உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையால் விருந்தினர் விடுதிகளும் ஹோட்டல்களும் தோன்றியுள்ளன.

எனினும் பல விருந்தினர் விடுதிகள் வெறுமையாகவே காணப்படுகின்றன. சிங்கள உல்லாசப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன் சிங்களவர்கள் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இது இரு இனங்களுக்குமிடையே புரிதலை ஏற்படுத்த வழிவகுக்கும். நாகவிகாரை தரிசனம் முடிந்து பஸ் ஒன்றில் வந்த சிங்களவர்கள் யாழ்ப்பாணம் சந்தையில் சிங்களத்தில் பேரம் பேசி பொருள்களைக் கொள்வனவு செய்வதையும் கட்டுரையாளர் அவதானித்தார். இது வரவேற்கத்தக்க விடயம்.

இளைஞர்களிடையே போதைவஸ்துப் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் இவர்கள் வாள்களுடன் குழுச்சண்டையில் ஈடுபடுகின்றனர். ரியூசன் முடிந்து மாணவர்கள் மிதிவண்டிகளிலும் பெற்றோருடனும் செல்கின்றனர். சில பெற்றோர் இரண்டு பிள்ளைகளை ஏற்றிக்கொண்டும் செல்கின்றனர். தமது பிள்ளைகள் வீதியோரப் போதைவஸ்து வியாபாரிகளின் வலையில் வீழ்ந்து தறிகெட்டுப்போய் விடுவார்களோ என்ற அச்சமே இவ்வாறு பெற்றோர் தமது பிள்ளைகளை ஏற்றிச்செல்வதற்கு முக்கியமான காரணம். யாழ்ப்பாணத்தின், மரபு, கலாசாரம், பண்பாடு என்பவற்றிலும், சமூகப் பொருளாதார விடயங்களிலும் தற்போதைய யாழ்ப்பாணத்தின் வளர்ச்சி தாக்கம் செலுத்துகிறது.

விவசாய நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தியடைந்து வருகின்றன. எனினும் யுத்தத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு இன்னும் செல்லவில்லை. அரச துறையிலும் தனியார் துறையிலும் ஒழுங்கான திட்டமிடப்படல்கள் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக மழைக்கு முளைத்த காளானைப்போல பல வியாபார நிலையங்கள் பல நகரப்பகுதியில் காணப்படுகின்றன. போதிய வருமானமின்மையால்

**மிதிவண்டி இப்போது வெளிநாட்டுப்பணம் காரணமாக ஸ்கூட்டியாக மாறிவிட்டது.**

**யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட அடிமட்ட இளைஞர்கள் போதைவஸ்துக் கும்பல்களால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.**


பல்பொருள் அங்காடிகள் மூடப்பட்டுள்ளன. விருந்தினர் விடுதிகளிலும் பல மாதங்களாக எவருமே செல்லாத நிலையும் காணப்படுகிறது.

யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட அடிமட்ட இளைஞர்கள் போதைவஸ்துக் கும்பல்களால் இலக்கு வைக்கப்படுகின்றனர். கைத்தொழில் முதலீடுகளெதுவும் பெரியளவில் மேற்கொள்ளப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணம் முறையான திட்டமிடல் இன்மையால் வீண்விரயமாகிறது. இந்தப் பணம் உரிய முறையில் முறையான திட்டமிடலுடன் மக்களுக்கு பிரயோசனப்படக்கூடிய வகையில் பயன்படுத்தப்படவேண்டும்.

இலங்கை அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள், மேற்பார்வை, வழிகாட்டல்கள் என்பவற்றை மாவட்ட செயலகம், மாநகரசபை என்பவற்றினூடாக வழங்கவேண்டும். போதைவஸ்துக்கு எதிராக சிவில், இராணுவ, பொலிஸ், அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கியதாக ஒரு உயரிய கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். போதைக்கு அடிமையானவர்களுக்கு மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும். போதைவஸ்து வியாபாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

# அறிந்தும் அறியாமலும்

சூழியன்



## காணோம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் காணாமல்போய்விட்டாரென பொலிஸ் அவசர பிரிவான '119' இற்கு முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது. முட்டாள்கள் தினமான ஏப்ரல் முதலாம் திகதியே இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராயப்பட்ட போது, நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷுக்கு நெருக்கமான ஒருவரே இவ்வாறு செய்துள்ளாராம்.

விடயம் எப்படியோ கசிய, இது தொடர்பில் வடிவேல் சுரேஷை நேரில் தொடர்புகொண்டு வினவினோம்.

" பாருங்களே, எனக்கு எதிராக யாரோ இப்படி செய்துவிட்டனர்." எனக்கூறி சிரித்தபடியே சமாளித்தார் 'வடிவேல்'சுரேஷ் எம்.பி.

## ஆயத்தம்

மேதினப் பேரணிகளையும், கூட்டங்களையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ், சிங்களப் புத்தாண்டு முடிவடைந்தகையோடு இதற்கான ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்துமாறு ஏற்பாட்டுக்குழுக்களுக்கு கட்சித் தலைமைகள் கட்டளையிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன கொழும்பை மையப்படுத்தியே மேதினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் நிகழ்வுகளும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளன.

## பயணம்



ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஏப்ரல் 14 ஆம் திகதியளவில் தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். தென்கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களால் விடுக்கப்பட்ட அழைப்பையேற்றே அவர் அங்கு செல்கின்றார்.

தென்கொரியாவில் குடியேறியுள்ள இலங்கையர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்தே இந்த அழைப்பை விடுத்துள்ளனராம். சர்வதேச நாணய நிதியத்தின் கடன், இலங்கையின் நடப்பு விவகாரம் என்பவை பற்றி அங்கு அநுர சிறப்புரையாற்றவுள்ளாராம்.

## குழப்பம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தற்போது மூன்றாகப் பிளவுபட்டுள்ள நிலையில், அந்தக்கட்சியில் உள்ள எம்.பிக்கள் சிலர், அடுத்தகட்ட நகர்வு பற்றி முடிவெடுப்பதில் குழம்பிப் போயுள்ளனராம்.

டலஸ் தலைமையில் அணியொன்று வெளியேறிவிட்டது. பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜயசேகர, ரொஷான் ரணசிங்க என ரணில் விக்கிரமசிங்க பக்கம் மற்றுமொரு அணி நிற்கின்றது. ராஜபக்சக்களுக்கு விசுவாசமாக ஒரு அணி செயற்பட்டுவருகின்றது. இந்நிலையில் எதிரணிக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று மொட்டுக் கட்சிக்குள் உள்ளக கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு சென்றால் நாமல் ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக்க வேண்டும் என மொட்டுக்கட்சிக்குள் ஒரு அணி எடுத்துரைத்துள்ளது. இதைவிடவும் பஸிலை நாடாளுமன்றம் அழைத்துவந்து அவரை எதிர்க்கட்சித் தலைவராக்குவது நல்லது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்வதெனில் பஸில் இரட்டைக் குடியுரிமையைத் துறக்க வேண்டும். தேசியப் பட்டியலை விட்டுக்கொடுக்க ஜயந்த கெட்டகொட தயார் என ஒரு எம்.பி. தெரிவித்தாராம்.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பதுதான் நல்லது என்ற ஆலோசனையும் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆசிரியன்

ஆறுமுகம் ரவீந்திரன்

நல்லையா மாஸ்டர் அன்று சற்று முன்னதாகவே படுக்கையைவிட்டு எழுந்துவிட்டார். மெதுவாக ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். இருளின் ஆதிக்கம் மெல்ல மெல்ல விலகிக்கொண்டிருந்தது. அவரின் மனதில் இனம்புரியாத ஒரு சோகம், வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஒரு பரபரப்பு.

"நான் பிறந்து இண்டையோடை அறுபது வருசங்கள் முடிஞ்சுபோச்சிது"

"இண்டைக்கு நான் றிட்டயர் பண்ணப்போறன்......"

அந்த வார்த்தைகள் விம்மலாக ஆரம்பித்து விஸ்வரூபமெடுத்து அவரின் இதயத்தை அதிரவைத்துக்கொண்டிருந்தன. "அப்பிடியெண்டால், நான் கிழவனாய்ப்போனேனே? இனி என்னாலை ஒரு பிரயோசனமும் இல்லையெண்டுதான் வீட்டுக்கு அனுப்பப்போறாங்களோ? இனிமேல் நான் யாருக்கும் பயனில்லாமல் ஒரு மூலையிலை கிடந்து வெந்ததைத் திண்டு விதி வந்தால் சாக வேண்டியதுதானோ?"

ஏதேதோ வினாக்கள் அவர் மனதில் வந்து அவரை அலைக்கழித்துக்கொண்டிருந்தன. கனக்கும் இதயத்தோடு மெதுவாக நடந்து கிணற்றடிப் பக்கமாக வந்தார். சற்றே தொலைவில் இலையும் குலையுமாக நின்ற வாழைத்தோப்பு அவரின் கண்களைக் கவர்ந்தது. அங்கே குலை வெட்டப்பட்டுச் சரிக்கப்பட்டுக் கிடந்த ஒரு வாழை மீது அவரின் பார்வை சென்று நிலைத்தது. முன்பு ஒருநாளும் காணாத ஒரு காட்சியைக் கண்டுவிட்டது போல அந்த வாழையையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் மாஸ்டர். ஏதேதோ எண்ணங்களெல்லாம் அவரின் மனத்திரையில் தோன்றி மறைந்தன. அன்று காலை அவரால் சாப்பிடவேமுடியவில்லை. சாப்பாட்டை ஒருபுறம் வைத்துவிட்டு தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு சற்று முன்னதாகவே கிளம்பிவிட்டார். சைக்கிளில் ஏறி அதன் பெடல்களைத் தன் பலங்கொண்டவரை உதைத்துத் தள்ளினார். அது தன் வழக்கமான விசித்திர ஒலிகளை எழுப்பிக்கொண்டு மெதுவாக நகர ஆரம்பித்தது. இடையில் ஒரு கூட்டம் மாணவர்கள் "குட் மோர்னிங் சேர்.." என்றவாறு அவரைக் கடந்துசென்றனர். அவர்கள் சென்ற பின்னரும் அந்த வார்த்தைகள் அவரின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

சைக்கிள் மெதுவாகச் சென்று முச்சந்தியைத் தாண்டி சற்றே சென்று இடது பக்கமாகத் திரும்பி சித்திவிநாயகர் கோவிலைத் தாண்டிச்செல்லும்போது சைக்கிளில் இருந்தவாறே விநாயகரைத் தரிசித்துவிட்டுச் செல்வது அவரின் வழக்கம். ஆனால், இன்று ஏனோ அவ்வாறு செய்ய அவர் மனம் இசையவில்லை. மெதுவாகச் சைக்கிளை விட்டு இறங்கி ஆலயத்துக்குள் சென்று கண்களை மூடிக் கைகளைக் கூப்பினார். தன்னை மறந்து அப்படியே சிலையாக நின்றார். எவ்வளவு நேரந்தான் அப்படி நின்றிருப்பாரென்று அவருக்கே தெரியவில்லை. கோவிலின் "கணீர்" என்ற மணியோசை அவரைச் சுய நினைவுக்குக் கொண்டுவந்தது. அவசர அவசரமாகத் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு "ஓ...நேரம் போட்டுது" என்று கூறிக்கொண்டே சைக்கிளை நோக்கி விரைந்தார்.

துள்ளி ஏறி சைக்கிளின் பெடல்களை தன் பலத்தையெல்லாம் ஒன்றுதிரட்டி உதைத்தார். அது தன் வழக்கமான கதியில்செல்ல ஆரம்பித்தது. மாஸ்டர் பாடசாலையை அடைந்தபோது பாடசாலை ஆரம்பித்து ஐந்து நிமிடங்கள் கடந்திருந்தன.

"என்ரை கடைசிக் கையெழுத்து சிவப்புக் கோட்டுக்கு கீழதான் விழவேணும் எண்டு விதியிருந்தால் அதை யார்தான் மாத்தேலும்?" என்று தனக்குள்ளேயே கூறியவாறு சைக்கிளை நிறுத்தினார். அதிபரின் சிவப்புப் பேனா காலனைப் போல ஒரு நிமிடம்கூட தாமதிக்காமல் தன் கடமையைச் செய்துவிடுவது வழக்கம். சிந்தித்தபடியே பெயர்ப் பதிவுக் கொப்பியை அணுகினார் நல்லையா மாஸ்டர். அங்கே அவருக்கு ஓர் ஆச்சரியம். சிவப்புக் கோட்டைக் காணவில்லை. "இண்டைக்கு என்ன நடந்தது?" என்று தன் கையெழுத்தைப் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தார். அதிபரின் கதிரை காலியாய்க் கிடந்தது.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்த மாஸ்டரின் மனதில் தான் முதல்முதலாகக் கடமையேற்ற அந்த நாள் நிழற்படமாக ஓடியது. அந்த இனிமையை அசைபோட்டபடியே அவர் மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தார். பாடசாலை தனக்கே உரிய பரபரப்புடனும் சுறுசுறுப்புடனும் இயங்கிக்கொண்டிருந்தது. எதிர்ப்பட்ட எல்லா ஆசிரியர்களும் அவரைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். வழக்கமாக எப்போதும் முரண்பட்டு நிற்கின்ற லிங்கநாதன் மாஸ்டரும் அன்று அவரைப் பார்த்து அத்தனை பற்களும் தெரியச் சிரித்தார்.

நல்லையா மாஸ்டர் தன் நேரசூசியை எடுத்துப் பார்த்துவிட்டு, '11 சீ' வகுப்பை நோக்கி நடந்தார். அவர் வகுப்பறைக்குள் நுழையவும் எல்லா மாணவர்களும் எழுந்து நின்று ஏக குரலில் "குட்மோர்னிங் சேர்..."என்று கூறவும் சரியாக இருந்தது. அந்த வார்த்தைகள் அவரின் செவி வழியே சென்று இதயத்தில் பட்டு ஏதோசெய்தன. ஒரு கணம் தன்னை மறந்து அப்படியே நின்றவர் மறு நிமிடமே "குட் மோர்னிங் பிள்ளையள், இருங்கோ.." என்றார்.

"இண்டைக்கு கங்கையில் விடுத்த ஓலை படிக்கவேணும்" என்றாள் மாணவியொருத்தி.

"பிரிவுத் துயர் எவ்வளவு கொடுமையானது எண்டதை இப்பத்தான் நானும் உணர்றன்" என்றார் மாஸ்டர்.

"என்ன சேர் சொல்லுறீங்கள்?" என்று அவரை நிமிர்ந்து பார்த்தான் சுரேஷ்.

"பிள்ளையள், நான் இண்டையோடை றிட்டயர் பண்ணப்போறது உங்களுக்குத் தெரியுந்தானே? நான் மிகவும் நேசிக்கிற உங்களையும் இந்தப் பள்ளிக்கூடத்தையும் விட்டிட்டு இண்டையோடை நான் பிரிஞ்சுபோறன். நாளையிலிருந்து உங்களுக்கு இந்தப் பாடத்தை வேறை யாராவது படிப்பிப்பினம்" என்று கூறி நிறுத்தினார்.

"என்ன சேர் இப்பிடிச் சொல்லிறீங்கள்? நாங்கள்'ஓ .எல்' எடுக்கும் மட்டுமெண்டாலும் நீங்கள் எங்களுக்குப் படிப்பியுங்கோவன் சேர்" என்று கெஞ்சினாள் மாணவியொருத்தி.

"இல்லையம்மா, என்னுடைய காலம் முடிஞ்சுது. இனி இஞ்சை எனக்கு வேலையில்லை. உங்களுக்கு இந்த சேரை ஞாபகமிருந்தால் பிறகு என்னை வீட்டை வந்து சந்தியுங்கோ. நீங்கள் எல்லாரும் எண்டைக்கும் என்ரை பிள்ளையள்தான்" என்றவரின் கண்கள் இலேசாகப் பனித்தன.

மாணவர்களின் துயரம் தோய்ந்த முகங்கள், சிலரின் கண்ணீர் எல்லாமே அவரைக் கலங்கவைத்தன.

எப்போதும் அந்த வகுப்பையே இரண்டுபடுத்துகின்ற குறும்புக்காரக் குமரன் அன்று மிகவும் அமைதியாயிருந்தான். மாஸ்டர் மெதுவாக அவனருகில் சென்று அவனின் தோள்களில் கைவைத்தார்.

"குமரன், என்ன இண்டைக்கு ஒரே அமைதி?" என்றார்.

"இல்லை சேர், நான் இனிமேல் குழப்படி செய்யமாட்டன், நல்லாய்ப் படிப்பன்" என்று கூறியவன் அவரை ஏற இறங்கப் பார்த்தான். அந்தப் பார்வையின் அர்த்தம் அவருக்குப் புரியவில்லை. இடைவேளை வந்தது. லிங்கநாதன் மாஸ்டர், நல்லையா மாஸ்டரின் கரங்களைப் பற்றி "வாங்கோ சேர் ரீ குடிப்பம்" என்று வாஞ்சையாக அழைத்தார்.

"சேர், உங்களுக்கும் எனக்கும் பள்ளிக்கூட வேலைகள் சம்பந்தமாக சில பிரச்சினைகள் வந்தது உண்மைதான். ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்கு உங்களிலை எந்தக் கோபமுமில்லை. சொல்லப்போனால் நான் உங்களை இஞ்சையுள்ள எல்லாரையும்விட மதிக்கிறன். நீங்கள் படிப்பிக்கிற விதத்தையும் மாணவர்களின்ரை பிரச்சினைகளை அணுகி அவையளை வழிப்படுத்திற விதத்தையும் கண்டு நான் உண்மையிலேயே பல சந்தர்ப்பங்களிலை ஆச்சரியப்பட்டிருக்கிறன்" என்று கூறி நிறுத்தினார் லிங்கநாதன். "லிங்கா, எனக்கும் உன்னிலை எந்தக் கோபமுமில்லை. நாங்களெல்லாம் இங்கை படிப்பிக்க வந்தனாங்கள். தனிப்பட்ட கோபதாபங்களை வளர்த்துக்கொள்ளிறதிலை என்ன லாபமிருக்கிது? அப்பப்ப ஏற்படுகிற கோபதாபங்களை அந்த நேரத்திலையே மறந்துபோறதுதான் ஒரு நல்ல ஆசிரியனுக்கு அழகு" என்றார் நல்லையா மாஸ்டர்.

சஞ்சீவி சிறுகதை

நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. பாடசாலை விடுவதற்கு இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருந்தன. மாஸ்டர் தன் கடிகாரத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த ஐந்து நிமிடங்களும் விலைமதிப்பற்ற பொக்கிசமாக அவருக்குத் தோன்றின. அந்த ஐந்து நிமிடங்களும் கண நேரத்தில் தொலைந்துபோக பாடசாலை மணி கம்பீரமாக ஒலித்தது. மாஸ்டர் ஒரு கணம் சிலிர்த்து நிமிர்ந்தார்.

"முடிஞ்சுது... எல்லாமே முடிஞ்சுது" அவரின் உள் மனம் புலம்பிக்கொண்டிருந்தது. தங்கள் சம்பிரதாயப்படி அவரை அவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு வர நண்பர்கள் விரும்பினர். ஆனால் அவர் அதனைக் கண்டிப்பாக மறுத்துவிட்டார். "நான் ஒரு கொஞ்சநேரம் பள்ளிக்குடத்திலை இருந்திட்டு வரப்போறன். தயவுசெய்து என்னை விட்டிடுங்கோ. எனக்காக [illegible] இஞ்சை நிக்கவேண்டாம்" என்று எப்படியோ கூறி அவர்களையெல்லாம் ஒருவாறு அனுப்பிவிட்டார் மாஸ்டர்.

பாடசாலையின் சத்தமும் சந்தடியும் மெல்ல மெல்ல அடங்கிக்கொண்டிருந்தன. மாஸ்டர் திரும்பிப் பார்த்தார். இறுதியாக நின்ற ஓரிரு மாணவர்களும் தத்தம் சைக்கிள்கள் சகிதம் வெளியே சென்றுகொண்டிருந்தனர்.

எங்கும் ஒருவித அமைதி சூழ்ந்துகொண்டது. மாஸ்டர் அடிமேல் அடிவைத்து காலையில் தான் சென்ற '11 சீ' வகுப்பறைக்குச் சென்றார். தனது கதிரையை இழுத்துப்போட்டுக் கொண்டு அமர்ந்தார். அவரின் முன் குமரன் இல்லை. சந்திரன் இல்லை, சுமதி இல்லை, சுதா இல்லை, சுரேஷ் இல்லை..... காலியாகக் கிடந்த கதிரைகளும் மேசைகளும் அவரை அச்சுறுத்திக்கொண்டிருந்தன. சட்டென எழுந்து வெளியே வந்தார். அந்தப் பாடசாலையின் ஒவ்வொரு கட்டடமாக, ஒவ்வொரு இடமாக மெல்லக் கால் பதித்து நடந்தார். எவ்வளவு நேரந்தான் அப்படி நடந்திருப்பாரோ அவருக்கே தெரியவில்லை. அருகிலுள்ள முருகன் கோவில் மணி மாலைப் பூசைக்காக ஒலித்துக்கொண்டிருந்தது. அவர் மெதுவாக கேற்றைத் திறந்து வெளியே வந்துகொண்டிருந்தார். என்றுமில்லாத ஒரு தளர்ச்சி அவரை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. சைக்கிளில் ஏற முயன்றார்.

முடியவில்லை. கைகளும் கால்களும் அவரின் கட்டுப்பாட்டை இழந்து ஏதேதோ செய்தன. சைக்கிள் அவரின் பிடியிலிருந்து தப்பித் "தடார்" என்று வீதியில் சரிந்தது, மாஸ்டர் தட்டுத் தடுமாறி தரையில் விழுந்தார். அவர் மீண்டும் கண்களை விழித்துப் பார்த்தபோது கட்டிலிலே படுத்திருந்தார். அவரைச் சுற்றி அவரது மனைவி, பிள்ளைகள், சில மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர் எல்லோருமே நின்றுகொண்டிருந்தனர்.

"என்ன சேர் எங்களையெல்லாம் நல்லாய்ப் பயப்படுத்திப் போட்டீங்கள்" என்றார் லிங்கநாதன் மாஸ்டர்.

"நான் அந்த வழியாலை வந்துகொண்டிருக்கேக்கை பள்ளிக்கூடத்துக்கு முன்னாலை ஒரே சனக்கூட்டமாயிருந்தது. என்னெண்டு பார்த்தன், நீங்கள் விழுந்து கிடக்கிறீங்கள் உடனே றெண்டு பெடியங்களின்ரை உதவியோடை உங்களை இங்கை கொண்டு வந்து விட்டிட்டு டொக்டர் நேசனையும் கூட்டிக்கொண்டந்து காட்டினனான். அவர் உங்களுக்கு ஒண்டுமில்லை, எல்லாம் நோமல் எண்டு சொல்லிப்போட்டுப் போயிருக்கிறார்" என்றார் சூரி மாஸ்டர்.


"சேர் இந்த றிட்டயாமன்ற் உங்களை இவ்வளவுக்குப் பாதிக்குமெண்டு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கேல்லை. ஓர் ஆசிரியனைப் பொறுத்தமட்டிலை சாகும்வரைக்கும் அவன் ஆசிரியன்தான். அந்த நிலையிலிருந்து அவனை இறக்க யாராலையும் முடியாது. இந்த றிட்டயர்மன்றைப் பற்றி அவன் கவலைப்படவே தேவையில்லை. மற்றப் பதவிகளிலை இருக்கிறவங்கள் ஓய்வுபெற்றால் கூடவே அவங்களின்ரை அந்தஸ்தும் கௌரவமும் எங்கேயோ தொலைந்துபோகும். ஆனால் ஆசிரியனைப் பொறுத்தமட்டிலை நிலைமையே வேறை." என்று கூறி அவர் முகத்தைப் பார்த்தார் ஈஸ்வரன் மாஸ்டர்.

"சேர், எங்கடை நற்பணி மன்றம் நடத்திற வகுப்புக்களுக்கு உங்களைப் பொறுப்பாய்ப் போடவேணும் எண்டு நான் இப்ப ஒரு நாலைஞ்சு மாதங்களாய் நினைச்சுக்கொண்டிருக்கிறன். நீங்கள் றிட்டயர் பண்ணின பிறகு இதை உங்களிட்டைச் சொல்லலாம் என்டிருந்தனான்" என்று சற்றே தயங்கி நிறுத்தினார் அதிபர் ஆனந்தராஜா. நல்லையா மாஸ்டரின் மனக்கண்ணில் மாணவர்கள் நிறைந்த ஒரு வகுப்பறை ஒரு கணம் தோன்றி மறைந்தது. அவரையும் மீறிய ஒரு புத்துணர்வு அவரின் உடலெங்கும் பரவ ஒருவித உற்சாகமடைந்தவராக அவர் கட்டிலிலே எழுந்திருக்க முயன்றார். அருகில் நின்ற அத்தனை பேரின் கரங்களும் அன்போடு தாங்கிக்கொள்வதற்காக அவரை நோக்கி நீண்டன.

02. 04.2023 சஞ்சீவியில் பிரசுரமான "கடவுள் தான் அனுப்பினாரா?' எனும் சிறுகதையை எழுதியவர் ராணி சீதரன். தொழில்நுட்பக் கோளாறு காரணமாக உடுவில் அரவிந்தன் எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.
(ஆ.ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கைவண்ணம்





பி.மதுக்ஷா,
தரம்- 10
மட்/ பட்டிருப்பு
பெரியகல்லாறு மத்திய
கல்லூரி,




கு.ஆத்மிகா,
தரம்- 6
யா/ அச்சுவேலி
ஆரம்பப்
பாடசாலை

சு.மாதுளன்,
தரம்- 1
யா/ கல்வயல் ஸ்ரீ
சண்முகானந்த
வித்தியாலயம்.






ரோகித்,
தரம்- 6
வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணக் கல்லூரி



## இருண்ட ஆகாயத்தில் உருகிய நட்சத்திரங்கள்

டானியல் சௌந்திரன்

நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும்
பிரகாசமான ஒளிச்சுடராய்
திசையெங்கும் பரவியிருந்தன

காற்றில் கலந்த சாத்தான்கள்
வானத்தைப் பிழந்து(த)
முழக்கத்துடன்
ஓங்கி அடித்தனர்

ஒரு நொடிப் பொழுதில்
பிரகாசமாய் ஒளிர்ந்து
எரிந்து கொண்டிருந்த
நட்சத்திரங்கள்
ஒளியிழந்து
உருகிக் கரைந்து
சிதைந்து கொண்டன

இருள் அசைந்து செல்லவில்லை
இருளின் உள்ளே
காற்று அசைந்து செல்லவில்லை

அழுகுரல்களின் கைகள்
வானத்தை நோக்கி
அசைத்துப் பார்த்தன முடியவில்லை

திசையெங்கும்
ஒப்பாரி ஓலங்கள்
சிறகு முளைத்த சம்மனசுகள்
பரலோக ராச்சியத்திலிருந்து
இறங்கி வரவில்லை
பரிசுத்தமான

நிலம் முழுவதும்
பெரும்
இரத்தப்பெருக்காய்
வழிந்தோடியது

மீண்டும் ஒருமுறை
உயிர்த்தெழுந்த யேசுநாதர்
உடல் முழுவதும்
இரத்தத்தால்
அபிசேகம் செய்யப்பட்டார்

---

RTI 04

பதிவிலக்கம்: G/NPC/2022/17

28.02.2023 ஆம் திகதி காலை 11.45 மணிக்கு Zoom இல் இடம்பெற்ற இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் அமர்வில் வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் தங்களது தகவல் கோரிக்கைக்கான பதில் வழங்கப்படுகின்றது.

வடக்கு மாகாண ஆளுநரின் இந்தியப் பயணம் தொடர்பானது

01 வடக்கு மாகாண ஆளுநர் இந்த ஆண்டு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது இந்தியப் பயணம் உத்தியோகபூர்வமானதா?

ஆம் சனாதிபதி செயலகத்தில் முறையான அனுமதி பெறப்பட்ட உத்தியோகபூர்வமான பயணம்.

02 அவரது பயணத்திற்கான செலவு எவ்வளவு? (விமான சிட்டை, தங்குமிடம், இந்தியாவில் போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட விரிவான அறிக்கை)

நிதி அமைச்சின் M.F.01/2015/01 ஆம் இலக்க 2015.05.15 ஆம் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைய (சுற்றுநிருபத்தினை https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-circular/section/2015 எனும் இணைப்பிலிருந்து தரவிறக்கி கொள்ளலாம்) பின்வரும் வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(iv)விமான சிட்டை - ரூபா 68,126.00 (செல்லுதல் மற்றும் திரும்பி வருகை உட்பட)
(v) இணைந்த கொடுப்பனவு - ரூபா 1,451,956.00 ( 11 நாட்களிற்கானது)
(vi) அமைப்ச் செலவு – ரூபா. 272,241.75 (11 நாட்களிற்கானது)

மொத்தமாக 15 நாட்கள் கௌரவ ஆளுநர் இந்திய பயணம் மேற்கொண்டிருந்தபோதும் 11 நாட்களிற்கு மட்டுமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனையவை தனிப்பட்ட விடுமுறையாகவே கருதப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கொடுப்பனவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

03 உத்தியோகபூர்வ பயணத்திற்கான நோக்கம்?
இந்தியாவுடனான பொதுவான வர்த்தக சந்தைகள் தொடர்பாக விவாதிப்பதும் இலங்கையின் வளர்ச்சியில் பங்கேற்பதற்கும், உதவுவதற்கும் ஆர்வமுடைய முதலீட்டாளர்களை கண்டறிவதற்குமாகும். மேலும் இலங்கை மக்களின் திறமை மேம்படுத்துவது , உலகளாவிய சிறந்த நடைமுறைகளை அறிவதுடன் மற்றும் தகவல் தொழில் நுட்ப மற்றும் வணிக முறைமைகளை இருதரப்பாருக்கும் நன்மையளிக்கக்கூடிய வித்தில் கலந்துரையாடல்களை நடாத்தலுமாகும்.

ஆளுநர் செயலகம் திருத்தி வழங்கிய பதில்

# போவோமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில், இந்தியாவுக்கான பயணத்துக்கு ஜனாதிபதியின் செயலர் அனுமதி வழங்கியுள்ளதுடன் இந்தப் பயணம் உத்தியோகபூர்வமானது என்று ஆளுநரின் செயலர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் 15 நாள்கள் பயணத்தில் 4 நாள்களை தனிப்பட்ட விடுமுறையாக ஆளுநர் எடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உத்தியோகபூர்வ பயணமாக வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்ற ஆளுநர் தனிப்பட்ட விடுமுறையையும் அதில் கழித்துள்ளார்.

மேலும் ஆளுநரின் இந்தியப் பயணத்துக்காக மக்களின் வரிப்பணமான 17 லட்சத்து 92 ஆயிரத்து 323 ரூபா 75 சதம் செலவிடப்பட்டுள்ளது. இதில், இந்தியாவுக்கான இரு வழி விமானப் பயணத்துக்காக ஆளுநர் 68 ஆயிரத்து 126 ரூபா செலவிட்டுள்ளார். 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வர்த்தக வகுப்பு பயணங்களுக்காகவே அவ்வாறானதொரு தொகை அறவிடப்பட்டிருந்தது.

மேலும் ஆளுநர் இந்தியாவில் மேற்கொண்ட உள்ளூர்ப் பயணம், ஹொட்டல் செலவு, உணவு என்பவற்றுக்காக இணைந்த கொடுப்பனவாக 14 லட்சத்து 51 ஆயிரத்து 956 ரூபாவும், அமைச் செலவாக 2 லட்சத்து 72 ஆயிரத்து 241 ரூபா 75 சதமும் வழங்கப்பட்டுள்ளது. இவை 11 நாள்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 4 நாள்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் ஆளுநரின் செயலர் பதிலளித்துள்ளார்.

'இந்தியாவுடனான பொதுவான வர்த்தகச் சந்தைகள் தொடர்பாக விவாதிப்பதும் இலங்கையின் வளர்ச்சியில் பங்கேற்பதற்கும், உதவுவதற்கும் ஆர்வமுடைய முதலீட்டாளர்களை கண்டறிவதும், இலங்கை மக்களின் திறமைகளை மேம்படுத்துவதுடன் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை அறிதல் மற்றும் தகவல் தொழில் நுட்ப மற்றும் வணிக முறைமைகளை இருதரப்பாருக்கும் நன்மையளிக்கக்கூடிய விதத்தில் கலந்துரையாடல்களை நடத்துதல் ' என்பனவே ஆளுநரின் இந்தியப் பயணத்துக்கான நோக்கங்கள் என்று ஆளுநரின் செயலர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்தப் பயணத்தின்போது ஆளுநர் அங்குள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன் இதன்போது இந்திய ஊடகங்களுக்கு நேர்காணலும் வழங்கியுள்ளார்.

ஆளுநர் தனது இந்தியாவுக்கான பயணத்தின்போது தமிழகம் தவிர்ந்த வேறு மாநிலங்களின் அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பலரையும் சந்தித்துள்ளார். எதிர்வரும் 28ஆம் திகதியுடன் ஆளுநர் பயணத்தை மேற்கொண்டு ஓராண்டு பூர்த்தி செய்யப்படும் நிலையில், அவரது இந்தியப் பயணத்தின் உத்தியோகபூர்வ நோக்கம் நிறைவேறியதா என்ற கேள்விக்கு செயற்பாட்டு ரீதியில் இல்லை என்பதே பதிலாகிறது. அவர் கூறியதைப்போன்று வடக்கு மாகாணத்துக்கு அவரது இந்தியப் பயணத்தால் இதுவரை நேரடி நன்மைகள் எதுவும் கிடைக்கவில்லை. சிலவேளைகளில் ஆளுநர் தனிப்பட்ட நலன்களை இந்தப் பயணத்தின் ஊடாக அடைந்தாரா என்பது தெரியவில்லை. ஒட்டுமொத்தத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட பணம் வீணடிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து வங்குரோத்தடைந்து மக்கள் இன்று துன்பப்படுவதற்கும், தற்போது அதிகரித்த வரிகளால் அல்லல்படுவதற்கும் இவ்வாறான வீணற்ற பயணங்களும், சொகுசு சுற்றுலாக்களும் ஒரு காரணமே.

**ஓர் ஆளுநரின் ஒரு பயணத்துக்கே இவ்வளவு செலவு என்றால்.....?**



இந்தியப் பயணத்தின்போது திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கும் ஆளுநர்.

ஜனாதிபதி செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தியமையால் தகவல் கோரிக்கையாளருக்கு குறித்த தகவல்களை முழுமையாக வழங்கமுடியவில்லை. குறித்த தகவல்களை ஜனாதிபதி செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் .

கேட்ட கேள்விக்குரிய பதிலை ஆளுநர் செயலகம் வழங்காமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மீளவும் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டது. இதன்போது வடக்கு ஆளுநரின் செயலர் பொ.வாகீசன் முன்னிலையாகியிருந்தார்.

ஆணைக்குழு, கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய பதில் வழங்கப்படாமை தொடர்பில் ஆளுநரின் செயலரிடம் கேள்வி எழுப்பியது. இதன்போது ஆளுநரின் செயலர், வடக்கு மாகாண ஆளுநரே அவ்வாறு பதிலளிக்குமாறு பணித்ததாகக் குறிப்பிட்டார். இதனையடுத்து ஆளுநரின் செயலரிடம், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ச ஆகியோரது பயண விவரங்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடான கோரிக்கைகளுக்கு பதிலளிக்குமாறு ஆணைக்குழு வழங்கிய கட்டளைகளைச் சுட்டிக்காட்டி , 'ஜனாதிபதியே தகவல் அளிக்கையில் ஆளுநர் பதிலளிக்காமல் நழுவமுடியாது. எனவே உடனடியாகப் பதில் வழங்குங்கள்' எனத் தெரிவித்து அதனை ஆளுநரின் செயலர் ஏற்றுக்கொண்டு திருத்தப்பட்ட பதிலை வழங்கினார்.

தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்

தகவல் அலுவலர்

01. [illegible]
02. [illegible]
03. [illegible]
04. [illegible]
05. [illegible]

I. குறித்த பகிரங்க அதிகார சபை: வடக்கு மாகாண ஆளுநர் செயலகம்
II. கோரப்படும் தகவல்கள்: வடக்கு மாகாண ஆளுநர் இந்த ஆண்டு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது இந்தியப் பயணம் உத்தியோகபூர்வமானதா?
ஆம் என்றால்,
அவரது பயணத்துக்கான செலவு எவ்வளவு? (விமானச் சிட்டை, தங்குமிடம், இந்தியாவில் போக்குவரத்துச் செலவு உள்ளிட்ட விரிவான செலவு அறிக்கை)
உத்தியோகபூர்வ பயணத்துக்கான நோக்கம் என்ன?
அவரது இந்தப் பயணத்தில் வேறு யாராவது இணைந்து கொண்டார்களா?
உத்தியோகபூர்வ பயணத்தின்போது ஆளுநர் சந்தித்தவர்களின் விவரங்கள்?

06.தகவல் கோரப்படும் விதம்–
ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்
07.வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெறவிரும்பும் மொழி – தமிழ்
08.கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (இல்லை)
09.கோரிக்கையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்)
திகதி: - 21.05.2022

ஆளுநர் செயலகத்திடம் முன்வைக்கப்பட்ட தகவல் கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ இயல்வாணன்

சாந்தன் என எழுத்துலகில் அறியப்படும் ஐயாத்துரை சாந்தன் தமிழிலும் ஆங்கிலத்திலும் புனைகதைகளை எழுதி வருபவர்களில் முக்கியமானவர். 1947ஆம் ஆண்டு சுதுமலையில் பிறந்த அவர் குடிசார் பொறியியலில் பட்டம் பெற்றவர். அத்துடன் சூழல் முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணிப் பட்டமும், ஆங்கில இலக்கியத்தில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றவர். குடிசார் பொறியியற்துறையிலும் ஆங்கில பாடத்திலும் விரிவுரையாளராகப் பணியாற்றியிருக்கிறார். ரஷ்ய மொழி பயின்றதுடன் லுமும்பா பல்கலைக்கழகத்தின் புஷ்கின் நிலையத்தில் ஈராண்டு ஆசிரியப் பயிற்சியும் பெற்றுள்ளார்.

க.பொ.த. உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருந்த வேளை அவரது முதலாவது சிறுகதையான 'பார்வை' கலைச்செல்வி இதழில் 1966 இல் வெளிவந்தது. தொடர்ந்து வீரகேசரி, தினகரன், சுதந்திரன், விவேகி, கதம்பம், மல்லிகை, இளம்பிறை, சமர், களம், வெளிச்சம், மூன்றாவது மனிதன், கலைமுகம், ஞானம், முரசொலி, ஈழமுரசு, ஈழநாதம், உதயன் சஞ்சீவி எனப் பல்வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் இவரது எழுத்துகள் வெளிவந்தன. கணையாழி, தாமரை, சாவி, புதியபார்வை, அகநாழிகை, யுகமாயினி, பாலம் முதலான தமிழக இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

1970இல் இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாக 'பார்வை' வெளிவந்தது. கடுகு -குறுங்கதைத் தொகுதி(1975), ஒரே ஒரு ஊரிலே - சிறுகதைகள்(1975), ஒட்டுமா- நாவல்(1978), முளைகள் சிறுகதைகள்(1982), கிருஷ்ணன் தூது -சிறுகதைகள்(1982), ஆரைகள் -நெடுங்கதை (1985), இன்னொரு வெண்ணிரவு - சிறுகதைகள்(1988), காலங்கள் - சிறுகதைகள் (1994), யாழ் இனிது - சிறுகதைகள்(1998), ஒருபிடி மண் -சிறுகதைகள் (1999), எழுதப்பட்ட அத்தியாயங்கள் - குறுநாவல் மற்றும் சிறுகதைகள் (2001), விளிம்பில் உலாவுதல் - குறுநாவல்கள் (2007), சிட்டுக்குருவி - சிறுகதைகள் (2014), சித்தன் சரிதம் - நாவல்(2001) ஆகிய இவரது புனைவுகள் நூல்களாக வெளிவந்துள்ளன.




சாந்தன் சோவியத் யூனியனுக்குப் பயணம் மேற்கொண்டு 'ஒளி சிறந்த நாட்டிலே' என்ற தலைப்பிலும் (1985), கென்யாவுக்குப் பயணம் செய்து 'காட்டு வெளியிடை' என்ற தலைப்பிலும்(2007), இந்தியாவில் இலக்கியப் பயணத்தை மேற்கொண்டு 'எழுத்தின் மொழி' என்ற தலைப்பிலும்(2020) பயணக் கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். சஞ்சீவியில் 28 வாரங்கள் எழுதிய 'இலக்கியக் கட்டுரைகள் 'இருபதாம் நூற்றாண்டு 'உலக இலக்கியம்'(2005) என்ற தலைப்பிலும், எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகளின் தொகுதி 'கேண்மை'(2018) என்ற தலைப்பிலும் வெளிவந்துள்ளன.

40 பிறமொழிக் கவிஞர்களின் கவிதைகளை சாந்தன் மொழிபெயர்த்துள்ளார். இது 'கனவெல்லாம் எதுவாகும்'(2017) என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. அவ்வாறே பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட 18 கதைகளை ஆங்கிலம் வழியே சாந்தன் தமிழுக்கு கொண்டு வந்துள்ளார். இது 'என் முதல் வாத்து'(2016) என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது.

பிரெஞ்சு மொழியில் வெளிவந்த ஜூல்ஸ் வேர்ணின் சிறுவர் நாவலை சாந்தன் மொழிபெயர்த்துள்ளார். இது'பூமியின் மையத்திற்கு ஒரு பயணம்'(2006) என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது.

சாந்தன் ஆங்கிலத்தில் சிறுகதைகள், கவிதைகள், நாவல்களும் எழுதியுள்ளார். அவரால் எழுதப்பட்ட The Sparks (1990) In Their Own Worlds (2000) The Northern Front (2005) ஆகிய சிறுகதைத் தொகுதிகளும், The W}irlwind (2011) Rails Run Parallel (2015) Every Journey Ends (2018) ஆகிய நாவல்களும், Survival and Simple Things (2002) கவிதைத் தொகுதியும் வெளிவந்துள்ளன. அத்துடன் சாந்தனின் எழுத்துகள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பல தொகுப்பு நூல்களிலும் அவரது தமிழ், ஆங்கிலப் படைப்புகள் வெளிவந்துள்ளன.

இலங்கை அரசின் உயர்விருதான சாகித்திய ரத்னா, இந்திய அரசின் சாகித்திய அக்கடமியால் பிறநாட்டுப் படைப்பாளிகளுக்கு வழங்கப்படும் பிரேம்சந்த் தகைசார் விருது, ராஜஸ்தானில் வழங்கப்பட்ட சாகித்தியஸ்ரீ விருது, பெயர்வே வாழ்நாள் சாதனையாளர் விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, வடக்கு மாகாண அரசின் உயர்விருதான முதலமைச்சர் விருது உட்படப் பல விருதுகள் அவரது இலக்கியப் பங்களிப்புக்காக வழங்கப்பட்டுள்ளன. தமிழிலும் ஆங்கிலத்திலுமாக தமது நூல்களுக்கு இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றுக் கொண்ட ஒரே எழுத்தாளர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

சாந்தனின் படைப்புகள் தனித்துத் தெரிவன. அவரது படைப்புகளில் சொற்சிக்கனத்தையும், ஆழ்ந்த பொருண்மையையும் கண்டு கொள்ளலாம். படைப்புகளின் பேசுபொருளும், பேசும் முறையும் தனித்துவமானவை. அவரது எழுத்தாளுமையை பறை சாற்றும் வகையில் 'சாந்தன் படைப்புலகம்' என்ற பெருந்தொகுப்பு வெளிவந்துள்ளது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்நூலில் சாந்தனின் ஆளுமையைத் தரிசிக்கலாம்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், திருமதி தக்சாயினி செல்வகுமார் ஆகியோரால் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் மிகக் காத்திரமான முறையில் தொகுக்கப்பட்டுள்ளமை முக்கியமானதாகும். இந்நூலில் ஈ.குமரனின் பதிப்புரை, தி.ஞானசேகரன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோரின் கட்டுரைகள் சாந்தனின் எழுத்துகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் தெளிவாக முன்வைக்கின்றன.


சாந்தன் எழுதிய 90 சிறுகதைகள், 37 குறுங்கதைகள், 17 குறுநாவல்கள், ஒட்டுமா நாவல், 3 பயணக் கட்டுரைகளின் பகுதிகள், நேர்காணல்கள், நூன்முகங்கள், 6 கட்டுரைகள், 6 அபுனைவுகள், விமர்சனங்கள், பார்வைகள், புகைப்பட மற்றும் தகவல் ஆதாரங்கள் என்பன இந்நூலில் உள்ளடங்கியுள்ளன. சாந்தனின் முழுப் படைப்புகளும் உள்ளடங்காவிடினும் அவர் தமிழில் எழுதியவற்றுள் பெருமளவானவை இப்பெருந் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.

சாந்தன் பற்றி அறியவேண்டிய, ஆய்வு செய்யவேண்டிய ஒருவருக்கு மிகச் சிறந்த வழிகாட்டலைத் தரக்கூடிய வகையில் 939 பக்கங்களில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அண்மைய ஆண்டுகளில் இத்தகைய பல தொகுப்புகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. தேடற்கரிய பல பழமையான நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளது. பல மூத்த படைப்பாளிகளது படைப்புகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. அந்த வகையில் வாழும் ஆளுமையான சாந்தனது படைப்புகளைத் தொகுத்து, அவரது எழுத்து ஊழியத்தைக் கௌரவித்துள்ளது எனலாம்.

நூற்குறிப்பு :சாந்தன் படைப்புலகம்/ தொகுப்பும் பதிப்பும்: ஈஸ்வரநாதபிள்ளை குமரன், திருமதி தக்சாயினி செல்வகுமார்/ வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை



○ ந.பரமேஸ்வரன்

**1926 ஜூன் 10**
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஆளுநர் நாயன்மார்கட்டு மருத்துவமனைக்கும் விஜயம் செய்து அங்கிருந்த ஏடுகளைப் பார்வையிட்டார்.

**1926 நவம்பர் 22**
அரசாங்க அதிபர் ஸ்மித் விடைபெற்றுச் செல்ல J.N.ரஸ்ஸல் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1926 நவம்பர் 28**
களுத்துறை தமிழ்ச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் பௌத்த வித்தியாலயத்தில் 28 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது.தலைவர் சுந்தரம்பிள்ளையும்,செயலர் செல்லத்துரையும் தமது அறிக்கைகளை வாசித்தனர். (தமிழர்களின் குடிப்பரம்பல் 1948 க்கு முன்னர் எவ்வளவு தூரம் வியாபித்திருந்தது என்பதைக் காட்டுவதற்காகவே இதனைப் பதிவு செய்கிறேன்)

இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு மதுபான விற்பனையைத் தடை செய்யுமாறு வலியுறுத்தி கிறிஸ்தவ மிஷனரிகள் மக்கள் மத்தியில் கருத்துக்கணிப்பை நடத்தினர். பெரும்பான்மையான மக்கள் வெளிநாட்டு மதுபான விற்பனையைத் தடை செய்யுமாறு கருத்து தெரிவித்ததையடுத்து 1927 ஜனவரி முதல் உல்லாசப்பயண விடுதிகள் உட்பட சகல இடங்களிலும் வெளிநாட்டு மதுபான விற்பனை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையால் தடை செய்யப்பட்டது.

**1926 டிசம்பர்**
மருத்துவர் குணரத்தினம் எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் FRC பட்டம் பெற்றதைத்தொடர்ந்து பேர்ளின்,வீயன்னா மருத்துவமனைகளுக்கு மருத்துவராக நியமனம் பெற்றார்.

நாவற்குழி புகையிரத நிலையத்தில் ஆரம்பத்தில் மேடை (platform)இருக்கவில்லை. கொழும்பில் வாழ்ந்த நாவற்குழிவாசிகள் 30 பேர் சேர்ந்து நாவற்குழி புகையிரத நிலையத்தில் நடைபாதை அமைக்கப்பட வேண்மென மனு ஒன்றைக் கையளித்தனர்.

கோண்டாவில் புகையிரத நிலைய மேடை (platform) திறந்து வைக்கப்பட்டது. இலங்கை புகையிரத சேவை பொது முகாமையாளர் இதனைத் திறந்து வைத்தார். இதற்கு ஓரிரு மாதங்கள் முன்னதாகத்தான் கோண்டாவில் புகையிரத நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இதனையடுத்து கொக்குவிலிலும் புகையிரத நிலையம் அமைக்கப்பட வேண்டுமென கொக்குவில் திருநெல்வேலி வாசிகள் வலியுறுத்தத்தொடங்கினர்.

ஊர்காவற்றுறையில் 40 கட்டில்களுடன் கூடிய மருத்துவமனை அமைப்பதற்கு 157,000 ரூபா ஒதுக்கப்பட்டது.

**1927 ஜனவரி**
தமிழ் - சிங்கள ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும் இரண்டு இனங்களும் இணைந்து பூரண சுதந்திரத்துக்காகப் போராட வேண்டும் என யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் வருடாந்த மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

[illegible] பொன்னம்பலம் (ஜி.ஜி)கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக (Hilary Barr) இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற இந்துக் கோயில் ஊர்வலமொன்றை கத்தோலிக்கர்கள் தடுத்தனர். பின்னர் இராணுவப் பாதுகாப்புடன் ஊர்வலம் நடைபெற்றது.

மயிலிட்டியில் காச நோய் மருத்துவமனை அமைப்பதற்கு அரசு அங்கீகாரமளித்தது.

**1927 பெப்ரவரி**
நவாலி - மானிப்பாய் வீதி, நவாலி - வட்டுக்கோட்டை வீதி என்பவற்றை தார் வீதியாக மாற்றும் பணிகள் ஆரம்பமாகின.

**1927 மார்ச் 12**
யாழ்.நகரின் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு 280.000 ரூபா அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது.

சிங்கப்பூர் நாகலிங்கம் என அழைக்கப்பட்ட நாகலிங்கம், சிங்கப்பூர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சமாதான ஆணைக்குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

**1927 மார்ச்**
யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் மகாத்மா காந்தியை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்தது.

நாகர் கோயிலுக்கும் எழுதுமட்டுவாளுக்குமிடையே படகுச்சேவை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

கேரதீவு வீதியின் கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகின

பூநகரி போக்குவரத்து இலகுபடுத்தப்பட வேண்டுமென குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு பொதுமக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையைத்தொடர்ந்து குடியேற்ற நாடுகளின் செயலாளர் கேரதீவு வீதியின் கட்டுமானப்பணிகளுக்கு அனுமதியளித்தார்.

குடியேற்ற நாடுகளின் செயலாளர் யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு மதுபான விற்பனைக்கு அனுமதியளித்தார். இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் பிரசாரங்களும் கண்டன ஆர்ப்பட்டங்களும் இடம் பெற்றன.

யாழ். பொது நூலக வருடாந்தப் பொதுக் கூட்டம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணக் கச்சேரியில் அரச அதிபர் ரஸ்ஸல் தலைமையில் நடைபெற்றது. 8,000 ரூபா நிலையான வைப்பிலிருப்பதாக பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தார்.தலைவராக அரச அதிபர் ரஸ்ஸல் தெரிவு செய்யப்பட்டார்.உப தலைவராக சேர்.கனகசபை தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக P.வைத்திலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். பொருளாளராக T.அருமைநாயகம் தெரிவு செய்யப்பட்டார். கணக்காய்வாளர்களாக R.R.நல்லையாவும் C.அருளம்பலமும் தெரிவு செய்யப்பட்டனர்.

**1927 ஏப்ரல்**
இரவிலும் தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தக்கூடிய வசதிகள் தபால் தந்தி அலுவலகங்களில் ஏற்படுத்தப்பட்டன.

திரு. சண்முகம் எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் cooperative surgery and surgical pathology பரீட்சையில் சித்தியடைந்தார். இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.


(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நேர்காணல் கடவுள்

இராகவன்

16



## உலகத்தின் மக்களும் மருமக்களும்?

அதையொரு சமூக நாவலாக எழுதினேன். வழமையான கதை சொல்லல் முறையை நான் பின்பற்ற விரும்பவில்லை. அதனால் வாசித்தவர்களிடமிருந்து நேரான கருத்துக்களேதும் வரவேயில்லை. ஒரு சமூக நாவல் என்னென்ன உள்ளடக்கங்களைக் குறைந்தபட்சம் கொண்டிருக்க வேண்டும் என வாசித்த சிலர் தங்களுக்குத் தெரிந்திருந்தவற்றையெல்லாம் ஒரு பாடநெறியை விளக்குவது போல வரிசையாக அடுக்கத் தொடங்கி விட்டார்கள். வெற்றி பெற்ற சமூகநாவல்கள் எனக்கருதப்பட்டவற்றிலிருந்தெல்லாம் மேற்கோள்களையும் எடுத்துக்காட்டுகளையும் முன்வைத்தார்கள் .அவற்றினையெல்லாம் பின்பற்றி எழுதுவதாக இருந்தால் ஒரு வருடத்தில் என்னால் நான்கு சமூக நாவல்களைச் சராசரியாக எழுதியிருக்க முடியும் என நம்புகிறேன். எனது குறிக்கோளும் எதிர்பார்ப்பும் அதுவேயல்ல. ஏன் வழமையான சமூகநாவல்களை நான் கடந்தேகக் கூடாது என்றிவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? என்பதுதான விளங்காமலிருக்கிறது.

நெருங்கிய நண்பர்கள் சிலர் நட்புக்காக இதைப்பதிப்பிக்க முன்வந்து சில பதிப்பகங்களுடன் தொடர்புகொண்டு பேசியிருந்தார்கள். எவருமே அதைப் புத்தகமாக வெளியிட முன்வரவில்லை. இந்தத் தகவலைத் தெரிவிக்க நண்பர்கள் சங்கடப்பட்டார்கள். நான் அதை விரும்பவில்லை. கைப்பிரதியை அவர்களிடமிருந்து வாங்கி வந்து கிடப்பில் போட்டுவிட்டேன். என்னதான் இருந்தாலும் அது எனக்குப் பொன்குஞ்சு தானே? ஒருநாள் என்னிடம் வந்து 'பக்கிள் தவராசா' அதைக் கண்டெடுத்து வாசித்துவிட்டுத் தருவதாகக் கொண்டு சென்றார். (உணர்ச்சிவசப்படாமல் வாசிக்கக்கூடிய வெகுசிலருள் அவரும் ஒருவர்) நான்கைந்து தினங்கள் கழிந்த பின்னர் அதைத்திருப்பித்தர வந்தார். நான் அவரிடமெதுவும் கேட்காமலேயே 'இதை எங்காவது பதிப்பிக்க முயற்சித்தீர்களா?' எனக் கேட்டார் . நான் அதற்குப் பதிலளிப்பதற்கு முன்பாகவே 'எவருமிதைப் பதிப்பிக்க முன்வந்திருக்க மாட்டார்களே. உண்மையில் இதை யாராவது பதிப்பிக்க முன்வந்தால் அவர்தான் எச்சார்பற்ற நடுநிலைப்பதிப்பாளர். மற்றது இப்பிரதியை ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்றவர் எழுதியிருந்தால் போட்டி போட்டு பதிப்பிக்க முன்வந்திருப்பார்கள். தவிரவும் இது ஓர் ஐம்பது வருடங்கள் கழித்து எழுதப்பட்டிருக்க வேண்டிய பிரதி. நீங்கள் அவசரப்பட்டு விட்டீர்கள்.' என அடுக்கிக்கொண்டே போனார்.

'நீங்கள் இப்போது சொன்னதையெல்லாம் ஒருவரி விடாமல் எழுதித்தாருங்கள். இப்பிரதிக்கு முன்னீடாகச் சேர்த்துக் கொள்கிறேன்' என்று அவரிடம் கேட்டேன்.

'இதுமட்டுமல்ல இன்னும் சில விடயங்களைச் சேர்த்து விரிவாக எழுதித்தருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். அதற்குப்பிறகு அவரைப் பல தடவைகள் சந்தித்து விட்டேன். அவருமதை எழுதித்தரவில்லை. நானுமதைக்கேட்கவில்லை. உலகத்தின் மக்களை மேலோட்டமாகப் பார்த்தால் அசாதாரணமானவர்களாகத் தோன்றலாம். இப்பிடியான மக்களெல்லாம் இருப்பது சாத்தியமா? எனக் கேள்வி எழலாம். ஆனால் நான் நேரில் பார்த்துச் சந்தித்துப் பேசியவர்களை வைத்துத்தான் இதை எழுதியிருக்கிறேன். சிலர் இதை அபத்தமான பிரதி என்றனர். இன்னும் சிலர் முழு ஆபாசமான பிரதி என்றனர். வேறுசிலர் ஆபத்தான பிரதி என்றனர். எனக்கப்படியெதுவும் தோன்றவேயில்லை. இப்பிரதியில் வருகின்ற எவரும் அசாதாரணமானவர்களில்லை. சாதாரணமானவர்கள்தான் . இத்தகையவர்களை சிலவேளை நீங்கள் சந்திக்காமலிருந்தால் அசாதாரணமாகத் தோன்றலாம். அதற்கு நான் பொறுப்பேற்க முடியாது.

உலகத்தின் மூத்தவன் பணத்தாசை பிடித்தவன். பணமே அவனுக்குப் பிரதானமானது. திருமணமாகாமல் கருவழிப்புச் செய்துகொண்ட ஒருத்தியை அதை நன்கு தெரிந்து கொண்டே திருமணம் செய்து கொள்கிறான். அதைச் சொல்லிச் சொல்லியே தேவைப்படும் போதெல்லாம் பெண் வீட்டாரிடம் பணம் கறந்து கொள்கிறான் .உலகத்தின் இரண்டாவது மகன் நாளாந்த வீட்டுக்கருமங்களையாற்றுவதற்கு உலகத்திடம் பணம் வாங்குகிறான். அதுமட்டுமன்றித் தமையனுக்கு ஒரு வேலைக்காரன் போலிருந்து செய்யும் ஒவ்வொரு வேலைக்காகவும் பணம் வாங்கிக் கொள்கிறான். உலகத்தின் கடைசி மகன் எதையும் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறான். மூத்த மகனும் இரண்டாவது மகனும் வலுவான காரணங்கள் ஏதுமின்றி அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கின்றனர். பொது வெளியில் ஒருவரையொருவர் மோசமாகத் தூற்றிக் கொள்கின்றனர். கடைசி மகன் இதிலிருந்து விலகி மூன்றாமாளாக வெளியே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான். தக்க தருணத்தில் சகோதரர் இருவரையும் விமர்சிக்கவும் செய்கிறான். அவன் எப்போதும் ஏதாவதொரு புத்தகத்தை வாசித்துக் கொண்டேயிருக்கிறான்.

'புத்தகமொன்றை எப்போதும் வாசித்துக் கொண்டிருப்பது தேவையற்ற விடயங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள மிகச்சிறந்ததொரு மாற்றுவழியாகும்.' என்பது அவனது மகுட வாக்கியமாகப் பிரதியில் தொடர்ந்து வருகிறது. உலகம் தனது மூன்று மகன்களுக்கும் திருமணம் செய்து வைக்க மூன்று பெண்களைத் தெரிவு செய்து வைத்திருக்கிறாள். இரண்டாவது மகன் மட்டுமே உலகத்தின் விருப்பப்படி அவள் தெரிவு செய்து வைத்திருந்த பெண்ணை மணந்து கொள்கிறான். மூத்தவனும் கடைசி மகனும் தங்களுக்குரிய பெண்களைத் தாங்களே தெரிவுசெய்து கொள்கின்றனர். உலகம் தனது மருமக்கள் கன்னிகளா? இல்லையா? என எதிர்கூறும் முறை விசித்திரமானதாக இருக்கிறது. 'பொக்குள் தளராமல் கிண்ணென்று இருக்கிறவள் தான் சுத்தமான கன்னி' என்று உலகம் இரண்டாவது மகனிடம் சொல்கிறாள். இதிலுள்ள அரசியலை வாசிப்பவர் மேலதிக விளக்கமேதுமின்றி எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

உலகம் இரண்டாவது மகனுக்கு தன் விருப்பப்படியே மணப்பெண்ணைத் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்தமையால் தனது தெரிவு சிறப்பானதெனக் காட்டுவது அவளது பிரதான நோக்கமாகும். அவள் தெரிவு செய்து மணமுடித்து வைத்த அப்பெண்ணுக்கு தொப்புள் கிண்ணென்றிருப்பதும் உலகத்தின் மூத்தமகனும் கடைசி மகனும் மணமுடித்த பெண்களுக்கு தொப்புள் பகுதி சுருக்கம் விழுந்து குழிதெரியாமல் இருப்பதும் இங்கே கவனம் பெறும் எளிமையான அரசியலாகும். தொப்புள் பகுதி உலகம் தெரிவு செய்த பெண்ணுக்கு சுருக்கம் விழுந்து குழி மறைந்திருந்தால் அவள்,' தொப்புள் சுருங்கிக் குழி மறைந்திருப்பவளே திருமணத்திற்கு முன்பே கன்னிகழியாதவள்' எனக் குறிப்பிட்டிருப்பாள் என்பது சந்தேகத்திற்கிடமற்றது . இது ஒரு திரும்பற்புள்ளியாக அமைந்திருக்கக் காணலாம். ஏனெனில் உலகம் இவ்விதமாக அறிக்கை விட்டதால் மூத்த மருமகளும் கடைசி மருமகளும் அவளை வெறுக்க ஏதுவானது. இங்கிருந்து தான் உலகத்திற்கும் இவ்விரு பெண்களுக்குமிடையில் குடுமிப்பிடிச்சண்டை ஆரம்பமாகிறது.

உலகம் கனவிலும் எதிர்பார்த்திராத வகையில் அவ்விரு பெண்களும் சேர்ந்து கொண்டு அவளைக் குடுமியில் பிடித்து சுவரோடு மோதுகின்றனர். அவளதைக் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லையெனினும் அதை எந்த விதத்திலும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் பதில் தாக்குதல் நிகழ்த்துகிறாள். ஒரு சண்டைப்படக் கதாநாயகி போல் மருமக்கள் இருவரையும் புரட்டிப் புரட்டியெடுத்து புறமுதுகிட்டு தலை தெறிக்க ஓட விடுகிறாள். மகன்களிருவரும் விலக்குப்பிடிப்பதற்கிடையில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது. மாமியார் உலகத்துடனான போரில் தோல்வியடைந்து புறமுதுகிட்டோடிய மருமக்கள் இருவரும் கூட்டணி அமைத்துக்கொண்டு ஊரில் தொப்புள் சுருங்கிய பெண்களையெல்லாம் தம்முடன் சேர்த்துக்கொண்டு உலகத்திற்கெதிராகத் திருப்பிவிடுவதில் வெற்றிபெற்றாலும் உலகம் சற்றுந்தளராமல் நட்ட கம்பம் போல் நின்று பிடிக்கிறாள். இதையெல்லாம் ஒரு தொலைக்காட்சித் தொடரைக் காட்டிலும் தரக்குறைவான பகுதியென வாசித்த சிலர் என்னிடம் சொல்லியிருந்தனர். நான் இதற்கு எதிர்வினையாற்றவில்லை. ஏனெனில் நான் இதுவரை எந்தவொரு தொலைக்காட்சித் தொடரையும் பார்த்ததில்லை. பார்த்திருந்தால் தானே தெரியவரும் தரக்குறைவு குறித்தெல்லாம் விவாதிக்க முடியும்? 'பக்கிள் தவராசா' இதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இங்கேயும் நான் எதுவும் சொல்லவும் இல்லை. கேட்கவும் இல்லை. அவர் முக்கியமாக உலகத்தின் கடைசி மகனைப்பற்றியே கதைத்திருந்தார். 'மெய்யாகவே வேறு வழியேதும் இல்லாத நிலையில் நாங்கள் உலகத்தின் கடைசி மகனைப் போல மாறிவிடுகிறோம். இதையெல்லாம் வெளிப்படையாகப் பேசிக்கொள்ள ஒருபோதும் சாத்தியமாவதில்லை. உலகத்தின் கடைசி மகனை அநேகர் புத்தகப்பூச்சி என்றே அறிமுகப்படுத்துகின்றனர். 'நான் பைத்தியமாகாமல் இருப்பதற்கு புத்தகங்களே காரணமாகும்' என அவன் அடிக்கடி குறிப்பிடத்தவறுவதில்லை.

அவன் தனது மனைவிக்கு நல்லொழுக்கக் கோவையொன்றை அறிமுகப்படுத்துகின்றான். அதைப் பின்பற்றி நடக்கும் படி அறிவுறுத்துகிறான். அவள் அதை மீறி நடந்துகொள்வதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறாள். பிற ஆடவர் போல் வற்புறுத்திப் பின்பற்ற வைப்பதில் அவனுக்கு உடன்பாடு இல்லையென்பதால் அவள் போக்கிலேயே விட்டுவிடுகிறான். அதன் பின்னர் அவளை எக்காரணம் கொண்டும் நெருங்குவதில்லை. அவளும் அதைப் பொருட்படுத்துவதில்லை. இருவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையும் குறைந்து விடுகிறது. அவன் எதையுமே சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்பவனாகத் தன்னை மாற்றிக்கொள்கிறான். துக்கம் எல்லை மீறும் போதெல்லாம் சிரித்துக்கொண்டே இருப்பான். 'துக்கத்தை அழுது தீர்த்துத்தான் வெளிப்படுத்தவேண்டும் என்பதில்லை. சிரித்துச் சிரித்தும் வெளிப்படுத்தலாம். துக்கத்தின் போது சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்பது அவனது மேற்கோள் வாக்கியமாக பிரதியில் இருவேறு இடங்களில் வருகிறது. குறிப்பிட்ட சிலரின் இறப்பு நேர்கையில் அவ்விறப்பு நேர்ந்த தினத்தை சந்தோச தினமாகப் பதிவு செய்கிறான். அதற்கான காரணத்தையும் விரிவாக எழுதிவைப்பதை வழக்கமாக கடைப்பிடிக்கிறான். தனக்கு இறப்பு நேரப் போகிறது என உணரும் தருணத்தில் சந்தோச தினங்களில் எழுதிவைத்திருப்பதையெல்லாம் தீக்கிரையாக்கிவிடவும் முடிவெடுத்திருப்பான். அவன் முன்னும் பின்னும் பகுப்பாய்வு செய்து சிந்திக்கக் கூடியவனாக வருகிறான். விரும்பித் திருமணம் செய்துகொண்ட பெண்ணை விடுத்து உலகம் தனக்கெனப் பார்த்துவைத்திருந்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டிருந்தால் தனது வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும்? என்றொரு கேள்வியை எழுப்புகிறான். இப்போது வாழ்ந்துகொண்டிருப்பதை விட வெகு சிறப்பாக இருந்திருக்கும் எனக் கருதலாம். எனினும் இதைவிட மோசமாக அமைந்திருக்கவும் சாத்தியம் இருப்பதை மறுப்பதற்கில்லை எனப் பதிலளிக்கிறான். எந்தவிதமான நெருக்கடியையும் ஒரு சிரிப்பினால் அல்லது பேரமைதி காப்பதனால் வெகு சுலபமாகக் கையாள முடியும் என்பது அவனது கோட்பாடுகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இங்கே நான் குறிப்பிட்டிருக்கும் சங்கதிகளை அடிப்படையாக வைத்து இந்த நாவலை நிராகரித்தவர்களிடம் கேட்க விரும்புவதெல்லாம் ஒன்றேயொன்று தான். 'இதையொரு வழமைக்கு மாறான பிரதி என்கிறீர்கள். அபத்தமான பிரதி என்கிறீர்கள். ஏன் அபத்தமான பிரதி என்று கூட வகைப்படுத்தியிருக்கிறீர்கள். இந்த வகைப்படுத்தல்களையெல்லாம் நான் கருத்தில் எடுக்கவில்லை. அவ்விதமாக வகைப்படுத்த உங்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால் உலகத்தினதும் உலகத்தின் மக்கள், மருமக்களினதும் நடத்தை மற்றும் இயல்புகளோடு நீங்கள் ஒருபோதும் செயற்பட்டதேயில்லையா?'

நேர்மையாகப் பதிலளிக்க நீங்கள் முன்வந்தால் குழப்பம் ஏதும் இருக்காது. இது வழமையான ஒன்று தான். நான் இந்தப் பிரதியை பக்கிள் தவராசாவிடமே திருப்பிக் கொடுத்துவிட்டேன். இதனைத் தொடர்ந்து வேறெந்த நாவலையும் நான் எழுதவில்லை. எழுதத் தோன்றவுமில்லை. ஏதோவொரு வேகத்தில் இந்தப் பிரதியை எழுதி முடித்துவிட்டேன். அது எனக்கொரு மனநிறைவைத் தந்திருந்தது. இதை எழுதிக்கொண்டிருந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருந்தேன். அதிலிருந்து விடுபடுவதற்கு இதை எழுதவேண்டியிருந்தது. இந்த வகையில் எனக்கு சாதகமாக அமைந்திருந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும். என்ன தோன்றினாலும் எழுதிவிடும் இயல்பு முன்பிருந்தது. பின்னர் அதற்கு அவசியமில்லை எனத் தோன்றியதால் அதைப் பின்பற்றாமல் விட்டுவிட்டேன். உலகத்தின் கடைசி மகனும் இப்படியான ஒருவன் தான். ஒருபோதும் கிடைக்கச் சாத்தியமற்ற ஒன்றுக்காக அவன் ஏங்குவதில்லை. அவ்வாறானதொன்று இருக்கின்றதென்ற தடயத்தையே அவன் அழித்துவிடுவான். அவசியமற்றதெனத் தோன்றும் ஒன்றை அவன் பின்தொடர்வதேயில்லை. சில வேளைகளில் அதுவொரு பெரிய விடயமாக மூன்றாமாளுக்குத் தோன்றலாம். அவன் தீர்மானம் எடுத்தால் பின்தொடர்வது நின்று விடும். அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்று அவனிடம் சொல்லிப் பார்த்தால் எந்த அடிக்கும் நகராத அம்மிகளை அவன் உங்களுக்குக் காட்டுவான். எந்த அடிக்கும் நகராத அம்மியை வைத்து என்ன தான் செய்ய முடியும்? நீங்களே சொல்லுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org